உ

# தோட்டுக்காரி

## அம்மன் கதை

க. கைலாசபதி
தமிழ்த் துறை.
பல்கலைக்கழக
பேராதனை



**கலைமகள் கம்பெனி**

174, ஹைரோடு, திருநெல்வேலி சந்திப்பு.

காபிரைட்] 1956 [விலை அணா 12

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chun[illegible]kam

உ

# தோட்டுக்காரி

## அம்மன் கதை.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

பழைய ஏட்டுப்பிரதியிலிருந்து
அகஸ்தீஸ்புரம் வைத்தியர்
ஆ. ஆறுமுகப்பெருமாள் நாடாரால்
பரிசோதித்து,
M. S. குமாரவேல் நாடாரால்
வெளியிடப்பட்டது.

கலைமகள் கம்பெனி
புத்தக வியாபாரம் திருநெல்வேலி ஜங்ஷன்

காபிரைட்] 1956 [விலை அணா 12

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:— 1867-வது வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் "தோட்டுக்காரி அம்மன் கதை" என்னும் இந்நூல் காப்பி ரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந் நூலுக்கு உடையவரான கலைமகள் கம்பெனியாரின் உத்தரவின்றி பிறர் இதை பதிப்பித்தலும், இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தலும் கூடாது. இதில் கண்டிருக்கிற விஷயங்களை அச்சிடுதலும் கூடாது. அப்படி மீறி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு
கலைமகள் கம்பெனியார்.

உ.



# விநாயகர் துதி

(எனக்குன்னிருபதம் நினைக்கவரமருள்வாய் என்றமெட்டு)

### பல்லவி

ஆகுவாகனத்தேறி வந்தருள்வாய் ஆனைமுகவனே
ஆகுவாகனத்தேறி வந்தருளவாய்

### அநுபல்லவி

ஆகுவாகனத்தேறி வந்தருள்
அடியிணை சித்திபுத்தி போற்றவே
பாகுசேர் மொழி மாதரிருபுறம்
பாங்குடன் நின்று கவரிவீசிட (ஆகு)

ருக்குமாங்கதற்குற்றநோயினை
ஒருநொடியினிற்றீர்த்த புண்ணியா
பக்குவமாக யாங்கள வில்லினிற்
பாடவிக்கினம பலதும் மாற்றவே (ஆகு)

கயமுகனெனும் அரக்கனைக் கொல
கயமுகத்துடன சென்றரைக்கணம்
பயமிலாது புல்லாயுதத்தினல்
பக்ஷமின்றியே அன்றுகொன்றவா (ஆகு)

வில்லினிற்கவிபாட அருளிய
விற்பனமுடை குருவைப் போற்றியே
நல்லதோர் கவி வில்லிற் பாடவே
நாயகா அருள் புரியவே யிங்கு (ஆகு)

குணமாயகத்தீசர் புரத்தினெல்லைக்குள்
குலசேகரவிநா யகக் கடவுளென
சணத்தினடியர் மாமாசு தவிர்த்தருள்
தந்திமுகவனே ஐந்து கரத்துடன் (ஆகு)

வெல்லிலை பழம் பாக்கு புஷ்பமும்
மேன்மையாயொரு கொட்டைத்தேங்காயும்
கல்லைமீதினிலே படைத்துடன்
கனம்பெறத் தூபதீபமேந்துவேன் (ஆகு)

பெண்ணரசெனும் தோட்டுக்காரியின்
பிறப்பிறப்பையும் ஓர்ந்து கூறிட
மண்ணுளோருற்று நோக்கிப் பின்வந்து
மனங்களித்திட அருள் புரியவே

கூறுந்தமிழ் முனிபுரத்தினுள் வளர்
குமாரசுவாமி நாடாரின் சேயெனும்
ஆறுமுகபபெருமாள் நாடாருரைக்
கருள் புரிந்திருளறுக்கவேயிங்கு (ஆகு)

புத்திமதி

மாதாபிதாவை வணங்கு—நாளும்
ஆதாரமாகவே அவர் சொல்லுக்கிணங்கு
தந்தை தாய் சாபம் பொல்லாது—அவர்
சிந்தை நொந்தால் மக்கள் செல்வம் நில்லாது
மாதாபிதாவுக்குத் துரோகம்—செய்யும்
பாதகரைச் சுற்றும் பாவம னைகம்
பெற்றவர் நேசத்தைத் தேடு—அவர்
குற்றத்தை நீக்கிக்குணத்தைக் கொண்டாடு
உள்ள தாய் தந்தைக்குத் தீங்கு - செய்யும்
பிள்ளையைத்தன் பிள்ளையே பழிவாங்கும்
கடலைப்போற் மாதா சகாயம்—அதற்
குடலைச் செருப்பாயுதவணும் ஞாயம் (மாதா)


எங்களிடம் கிடைக்கும்

## வில்பாட்டு தினுசுகள்!

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | முத்தாரம்மன் கதை வில்பாட்டு | | 0 | 12 |
| 2. | சின்னத்தம்பி | ,, | 0 | 6 |
| 3. | இசக்கி கதை | ,, | 0 | 6 |
| 4. | காந்தி மகான் | ,, | 0 | 5 |
| 5. | பார்வதியம்மன் | ,, | 0 | 5 |
| 6. | சுடலைமாடன் | ,, | 0 | 5 |
| 7. | சாஸ்தா கதை | ,, | 0 | 4 |
| 8. | தர்க்கராஜன் | ,, | 0 | 4 |
| 9. | முத்துபட்டன் | ,, | 0 | 4 |
| 10. | சங்கிலிப் பூதத்தார் | ,, | 0 | 4 |
| 11. | வல்லரக்கன் | ,, | 0 | 3 |

கிடைக்குமிடம்:—

கலைமகள் கம்பெனி

பிரபல புத்தக வியாபாரிகள்

174, ஹைரோடு, திருநெல்வேலி சந்திப்பு.

# தோட்டுக்காரி அம்மன் கதை

## விருத்தம்

சீரணி செல்வமோங்கும் தெட்சணபூமி தன்னில்
பாரணியான முட்டப்பதி தனில் தோட்டுக்காரி
தாரணி தனிற் பிறந்த தமிழிசை வில்லிற் கூற
காரண வேத ஞானக் கணபதி காப்புத்தானே

## நடை

பூரணமாம் தோட்டுக்காரி தான்பிறந்தகதையை
பூதலத்துள்ள மனிதர் யாவருமே கேட்க
காரணமாயிக்கதையைக் காசினியிற் கூற
கந்தனுக்கு மூத்தபிள்ளை வந்தருளவேணும்
வேணுந்தமிழெந்தனுக்குத் தாயே கலைவாணி
வேள்விமலை தன்னில் வளர் வள்ளிமணவாளா
ஆணவஞ்சேர் தோட்டுக்காரி அம்மன் கதை கூற
ஆதிபத்திரகாளி யுந்தனருள் தரவேவேணும்
பத்திரமாய் பாற்கடலில் உற்ற அரவணையில்
பள்ளிகொண்ட மாலுமிலட்சுமியுந் துணையாமே
சித்திரஞ்சேர் தோட்டுக்காரி யம்மனுடைய கதையை
செந்தமிழோர் முன்னெழுதி வைத்திருந்ததில்லை
இல்லையிந்தக் காவியமு மிதற்கு முன்னேயொருவர்
ஏடெழுதிச் சேர்த்துக் கவிபாட வைத்தாரில்லை
வில்லிற்கதை தங்கள் தங்கள் விஸ்தாரத்தினாலே
வேளைக்குவமை படித்துக் கொள்வார் பெரியோர்கள்
ஆனாலும பெரியவாகள தஙகளுட பாதம்
ஆதரித்து எந்தலைமேற்கொண்டு படிக்கின்றேன்
தேனாருஞ் சரஸ்வதிதன் திருவருளினாலே
செந்தமிழாலிப்பொழுது சேர்த்தெழுதலுற்றேன்
வையகம புகழுமகத்திசாபுரந்தன்னில்
வலங்கை மன்னர் குலமதிலே வந்ததமிழாழன்
துய்யபுகழ் பூதத்தான் பெருமாளருள் பாலன்
சொற்புலவனாறுமுகம் செப்பின சொல்லாமே
என்பேர் தனக்கெழுத்து இன்னதென்றறியேன்
எட்டிரண்டு மின்னதெனும லட்சணமுமறியேன்
நம்பெருமையல்ல உங்கள் தன்பெருமையாலே
கற்றமிழோர் தங்கள் பாதம் நாவில்மறவேனே
மணஞ்செருஞ் செந்தட்டூம் வில்லுஞ் சொல்லுந்திருத்தி
வையம மெய்க்க எந்தனுக்கு வாய்த்தவித்தை தந்தோன்
அணஞ்சபெருமாள்ப் புலவரெந்தன் குருநாதன்
அவனுடைய மலர்ப்பாதமடியனென்றும் மறவேன்
மற்றுமுள்ள செந்தமிழ்ப் புலவர் தங்கள்பாதம்
வாய்மையுடன் போற்றி இந்த ஏற்ற தமிழ் சொன்னேன்

புத்தி தெரியாத சிறுபிள்ளை பிழைசெய்தால்
பேணிக்கொண்டு தாய்தகப்பர் தான்பொறுத்தாப்போல
அப்படிப்போ லெப்படியுமான தமிழோர்கள்
அறியாத சிறியன் சொல்லையா தரித்துக் கொள்வீர்
சொற்படியுமுங்கள் பாதமெப்பொழுதுஞ் சுமப்பேன்
சொற்புலவ ரெப்படியுந்தான் பொறுத்தருள்வீர்
எப்படிப்போல் நானடியேன் சொன்ன தமிழென்றால்
ஈற்றுப்புலிக்கிப்புலிகள தோற்றுவதும் போல
மற்றுங்கரொவ்வாத தங்கத்திறகிணையாய்
மாநிலத்தில் பித்தாளை நானசரியென்றாப்போல்
போதச்செருமி வளர்ந்த பூமரத்துக்கொப்பாய்
புல்லுக்கோரை தான் செருமி நிற்பதுமொப்பாமோ
வேதப்பிரமன்படைத்த பல்லுயிர்க்கொப்பாய்
வித்தாரக் கண்ணாளர் செய்யுஞ் சித்திரமுஞ் சரியோ
ஆனைக்கிணை விட்டிலுள்ள பூனை சரியாமோ
ஆட்டுக்குட்டி சாட்டுப போதிதானெடுக்குமோ தான்
சேனைப்பரியானைப் படை தான் சரிவதற்கு
சிற்றெறும்பு பத்திவிட்டுத்தான் சரிவதென்ன
ஆண்டொரு தொளாயிரத்து ஐம்பத்தொனாரும் வருடம்
அரிய விருக்ஷிக மாதம் தெய்தி வொனபதிலே
வேண்டும மதிவாரஞ்சோதி நாளமரபக்கம்
விசயமுள்ள பஞ்சமி விஷ்கமபயோகமதிலே
பத்திரை காணந்தலு லக்கினத்திலுள்ளே
பாவலர்கள் நாவலர்கள் கண்டுபுகழ்ந்திடவே
அத்தனருளாலே கவிஆறுமுகஞ் சொன்னேன்
ஆனாலும் தமிழ்ப்புலவரா தரித்துக் கொள்வீர்
நறை கமழும் நாரணருமாதி பிரமாவும்
நாயகிமாரொக்க வாழிநால் மறையும் வாழி
நிறைவாக சித்தர் முனி நேர்மனுடர் வாழி
இத்தமிழைக் கற்றோரும கேட்டோரும் வாழி
நற்றமிழிதனைச் சேர்த்தெழுதி வைத்த
நாவலரும மக்கள்கிளை ஒத்தினிதாய் வாழி
சித்தியுடன் தானெழுதி அச்சிற் பதிப்பித்த
சிறியேனும் நாட்டாரும நீடூழி வாழியே

## விருத்தம்

தெக்ஷிண பூமியான தென்கன்னி குமரிநாட்டில்
மிக்கதோர் விதியினாலே வெள்ளியாம் பாறைதன்னில்
மைக்குழல் தோட்டுக்காரி மடிந்துபின் பிறந்தவாறும்
செப்பமாய்ப் புவியோர் கேட்கச் செப்புவேனபுவியுள்ளோர்க்கே

## நடை

காடான நாட்டிலே நன்னாஞ்சி நாட்டிலே
வாடாத பகவதியாள் வாழுங் கன்னி நாட்டிலே
கடலாந்திரை முகமாம் கனகமணி மண்டபமாம்
அடவான கொடிமரமும் அரியமணித் தேருடனே

மாருக்கு முத்தளக்கும் முட்டப்பதி நாடதிலே
பாருக்குள் நெறிநடக்கும் பார முட்டப்பதி தனிலே
வல்லமுட்டப் பதிதனிலே வாழ்ந்திருந்தார் ராசாக்கள்
கொல்லமட்டும் குமரிமட்டும் கோழிமுகடேறி மேயும்
கயமதிலே கிடக்கும் முத்து கரையில் வந்துசேருமிடம்
திசைபுகழ கோட்டையிட்டுச் சிறந்த முட்டப்பதி தனிலே
வட்டாரக்கோட்டையிட்டு வாய்த்தபெரும்படையும்வைத்து
தட்டரசிறப்பதிலுஞ் சாத்தாண்டிக் கோயில் மட்டும்
வாச்சான் குளமதிலும் வனனியூத்து இளமரமும்
தீப்பாஞ்சிச் சாலையிலும் சிறந்த சுக்குப்பாரதிலும்
வாகையடிக் கோவிலிலும் வளருமொற்றையாலதினும்
தேவர்வந்து தான மகிழுஞ் செந்தாழைமூடதிலும்
தளமான பூந்தோப்புஞ் சாத்தாவின் கோவில் மட்டும்
அளக்குடியும் பொழிமுகமும் அமமச்சரினந்தோப்பும்
கருவேலன்பாறையிலுங் கன்னுரோடை தனிலும்
பரிவர்ன சரக்கு வண்டிப் பாதையிலுஞ் சாலையிலும்
வக்கிருணி பறையிலும் வழிபோற சாலையிலும்
உக்கிரமாய்க் கோட்டையிட்டு உலகமரசாள்வதற்கு
பட்டணத்தார் குடியிருப்பும் பாலாலோடை தனிலும்
திட்டமுடன் தானுள் தீவிரமாக நடந்து
கோனாண்டி ராசாவும் கொத்தளப்பு ராசர்வும்
தானுகக் கோட்டையிட்டு தக்கமுட்டப் பதிதனிலே
வாழும் மணிமுடி சூடி வாய்த்த தெய்வ ராசாக்கள்
ஆளுக்கொரு கோட்டையிட்டு அழகுமுட்டப்பதிதனிலே
கோட்டைகளாம் வாவிகளாங் குளிக்கும் நீராழிகளாம்
வாட்டமில்லாக்கோபுரமாம் வாய்த்த நல்லகொடிமரமாம்
ஆடவர்கள் வந்து தொழும் அரண்மனையாஞ் சாவடியாம்
மாடத்தெரு வீதிகளாம் வாய்த்த நல்ல நெடுந்தெருவாம்
தேவிமார் கொலுவிருக்கச் செம்பொன் மணிமேடைகளும்
ஆவலுடனே முகித்து அங்கிருந்தார் ராசாக்கள்
பட்டணத்து ராசாக்கள் பகுத்துடனே முடி சூடி
கட்டாக ஒரு குடைக்குள் கருத்தான ராசாவும்
கரிபரியுங் காலாளும் கனத்த ரதக்காருடனே
செருமி நிற்கும் பரிகலமும் சிறந்த மந்திரிமாரும்
வாள்பரிசைக்காரருடன் வளைந்து நிற்குஞ் சேவகரும்
ஆளான சேவகர்கள் ஆன பட்டாணிமாரும்
முன்னூறு தண்டிகையும் மூடாவுக்காரர்களும்
பண்ணு தமிழ்க்காரர்களும் பலபடையுஞ் சூழ்ந்துவர
சொல்லரிய வன்னியரும் சூழ வெள்ளைக்காரர்களும்
வில்லருடன் மலையாளர் வேண்டும் பிள்ளைக்காரர்களும்
கொம்பாஞ்சிச் சேவகரும் கும்பனிகளும் நெருங்க
செம்பொன் மணிவர்சலியே செருமியங்கே தானிருக்க
முன்னூறு தண்டேறியும் முடுகுநாட்டு வன்னியரும்
பெண்ணுர்கள் குரவையிட பேரரசன் வீற்றிருந்தார்
மீறிவரும் மாற்றலரை வெருட்டி வெட்டி ஒருகுடைக்குள்
ஆறிலொரு கூறுகொண்டு அசையாத மணியுங் கட்டி

முட்டப்பதி நாட்டை எல்லாம் முடிசூடி யொருகுடைக்குள்
கட்டுடன் கோணண்டி ராசன் கருத்துடனே ஆட்டிருந்தான்

## நடை

அப்படி மன்னரரசாண்டிருக்க
ஆளும் படையோடே வாளும் நெருங்க
நிற்கவேகும்பனிக்காரரொருபத்தி
நீட்டிப்பொரு மீட்டிக் காரரொருபத்தி
பக்கத்தில் தீவெட்டிக்காரரொரு பத்தி
பல்லக்குத்தான் சுமப்பார்களொரு பத்தி
செப்பமாய்க் கட்டியக்காரரொரு பத்தி
சிங்கார வாத்தியங் கொட்டவொருபத்தி
கப்பங் கொடுவந்து நிற்கவொரு பத்தி
காணிக்கை வைத்து தொழவொருபத்தி
செப்பமாய்க் கைகட்டி கும்பிட்டு நிற்பார்
சேரவே வாசல் பிரதானிமாரும்
கோட்டையிற் பீரங்கி ஏத்தியிருப்பார்
கொத்தளத்திற் படை கூடியிருப்பார்
நாட்டுக்கரசனுக்கஞ்சிப் பதறி
நடுநடுங்கிச் சிலபேர்களும் நிற்க
ஆளும்பல பேர்களூழியஞ் செய்ய
அதிலே சில பேரதிகாரம் பண்ண
வாளும் கணக்கு மெழுதச் சிலபேர்
மணிம துரங்கள் பதிப்பார் சிலபேர்
பரிவான முட்டப்பதியிலே ராசன்
பாவித்துக் கோபித்தவனு மென்செய்வான்
அரிய புகழான செங்கோலு மேந்தி
ஆற்கமாய்த் தங்கமுடியுந் தரித்து
மூத்த நயினூர்க்கோர் கோயிலும் வைத்து
மூன்று நேரம் சிவபூசை நடத்தி
வாய்த்த கோணண்டி மகராச வீரன்
வருடத்தில் ரண்டு திருநாள் நடத்தி
பாப்பார்க்குத் தானம் பலதுங் கொடுத்து
பத்திபெறச் சத்திரங்களுஞ் செய்து
கோப்பசையாமலே கோணண்டி ராசன்
குடியான பேரையமர்த்தி மெதுவாய்
அடையலரின் றியே ஆறென்று வாங்கி
அசையாமணியுந் துலங்கிடவே தான்
சடையாமல் முட்டப்பதி நாடுதன்னில்
சமர்த்தாய் அரசனுந் தாணண்டிருந்தான்

## விருத்தம்

இப்படி படைகளோடே இலங்கு கோணண்டிராசன்
செப்பமாய்ப் புவியோர் மெய்க்கச் சிறந்தரசாளும் நாளில்
மற்பணி தேவியாற்கு மதலைதா னெனறில்லாமல்
தப்பர வாகத்தேவி சலித்தவ ளிருந்தாளன்றே

## நடை

அப்படியே முட்டப்பதி யாண்டிருந்தார் ராசமன்னன்
ஆளும்படைதான் நெருங்கவே தான் (ஆளும்)
செப்பரியபட்டணத்தில் தெய்வ ராசன் பெற்றெடுத்த
தேவியெனும் மந்திரப் பூமாலே (தேவியெ)
மாலேயிட்டு மணஞ்செய்து காலம் வெகு நாளதாக
மங்கையர்க்குச் சந்ததி யில்லாமல் (மங்கை)
காலம் வெகுகாலமாக வாலவயதானதிலே
கைக்குழந்தை பெற்றேனில்லே யென்ன (கைக்கு)
கோலமில்லாக் கோலமிது குழந்தை யில்லாதிருந்தால்
கொஞ்சமொழி சொல்லி நகைப்பாரே (கொஞ்ச)
ஆலமுண்ட ஈஸ்வரரே அம்மை சிவகாமி பங்கா
ஆண்மதலே ஒன்று நீ தாராயோ (ஆண்ம)
ஏசுவார் நகைத்திடுவார் என் தரத்திலுள்ள பெண்கள்
இத்தனைக்கும் காத்தர்க்கென் செய்தேனே (இத்தனே)
ஆசைக்கெந்தன் தேசமதை ஆண்டுமுடி சூட்டுதற்கு
அன்பாயொருசந்ததி வேண்டாமோ (அன்பா)
வேண்டாமோ காணென்னுடைய மெல்லியிளந் தோழியரே
வெம்பி முகஞ்சம்பி வாடுறேனே (வெம்பி)
ஆண்ட பிரமதேவனே அடியாள் தலேதனிலே
அன்றெழுதி வைத்தபடி தானே (அன்)
வைத்தபடி தானேவென்னே வையகத்திலுள்ள பெண்கள்
மலடியெனறு சொல்லி நகைப்பாரே (வைத்த)
சிற்றிடையுந்தான துவண்டு செய்யமுன்னெற்றி நரைத்தும்
சேரமலடானேனே சிவனே (சேர)
மலடிமலடி யென்று மானிடவர் சொல்லும் போது
மாளுதுடலாவிகுன னுதையோ (மாளுது)
முழுதும் வழியிலென்னே முன்னே கண்டபேர்களெல்லாம்
முகத்தினிலுமெட்டி முழியாரே (முகத்)
அருளும்படியே என்னே இருளி இருளி யென்று
ஆருஞ்சொல்லிச் சேர நகைபபாரே (ஆருஞ்)
இருளி என்றென்னேச் சொல்ல என்சரீரங் குன்னுதடி
என தலேயிலயன் விதித்தவாறே (என் தலே)
பெற்றெடுத்துப் பிள்ளே தன்னே முத்தமிட்டுப் பால்கொடுத்து
பேதலிப்புத் தீராதோ சிவனே (பேதலிப்பு
இத்தனேக்கும் நானொருத்தி இளமையிலே மலடாக
இருக்கவே பிரமன் படைத்தானே (இருக்கவே)
படைத்த பிரமனுக்கும் பார்வதி சிவன் றனக்கும்
பாவ தோஷஞ் செய்தவளும் நானே (பாவ)
அடைத்துக் கதவைப் பூட்டி அந்தரத்திலிருந்தாலும்
ஆறுலும மோக்ஷமுண்டே பெண்காள் (ஆறுலும்)

செய்யமகன் பெற்றெடுத்து செப்பமுடன் நீராட்டி
சிறுகுழவிக்கருள் சேனையூட்டி (சிறு)
பையமகனை யெடுத்துப் பாலூட்டித்தாராட்டி
பாரத்தொட்டிலிலாட்டி மகிழேனே (பார)
சேருடி சதங்கை தண்டை கிண்கிணியுந் தானசைய
தெருவதிலே ஓடி விளையாட (தெரு)
வீருடி எடுத்தணைத்து வேந்தர் பெருமான் மகிழ
மெல்லச் சிரித்துக் கொஞ்ச வேண்டாமோ (மெல்ல)
தள்ளிநடையிட்டு மகன் மெள்ள விளையாடிக்கொண்டு
தாய் மடியிலேறவும் வேண்டாமோ (தாய்)
பள்ளியிலே சென்று மகன் பிள்ளைகளோடே படிக்கும்
பாவனையைக் கண்டு மகிழேனே (பாவனை)
முத்தி முகத்தோடணைத்து மோகவர்ணப் பொட்டுமிட்டு
முகவாசை மகவாசை பார்த்து (முக)
எத்திசையுள்ளோரறிய இலங்கும் பள்ளிதன்னில் நின்று
எந்தன் மகன் வரும் பவனி பார்த்து (எந்தன்)
பார்த்து மகன்றேழுருடன் படித்து விளையாடி வரும்
பாவனைபார்த்தாசை தெளியேனே (பாவனை)
எந்தன்மகன் படித்துவர ஏடுடனே சேர்த்தணைத்து
இலங்குமணி மார்போடணையேனே (இலங்கு)
மார்போடே சேர்த்தணைத்து வையகத்தோர் தானறிய
மகன்றனக்குக் கலியாணஞ் செய்து (மகன்)
சீருடைய மருமகளுஞ்செல்ல மகன் கூடிவர
சேர்த்துமணி மார்போடணையேனே (சேர்த்து)
அணைத்தெடுத்து மருமகளுமாசைமகனுடனிருக்க
அன்னேரங் கண்டாசை தெளியேனே (அன்னே)
இணைபிரியா திருபேரும் இருந்து கொஞ்சி விளையாடி
இருப்பது கண்டாசை தெளியேனே (இருப்பது)
நற்புடனே பிள்ளையினல் நாயகியுந்தான் கலங்கி
நாயகன் கோனுண்டி ராசனேடே (நாயகன்)
இப்படியேதான் புலம்பிமந்திரப் பூமாலையம்மை
ஏங்கிபெருமூச்செறிந்துநின்ருள் (ஏங்கி)

## நடை

என்றுசொல்லி திருத்தேவி ஏங்கி நெடுமூச்செறிந்து
குன்றி மனம் மிகவாடிக் கண்ணருவி பாய்ந்திடவே
தளர்ந்துடல் தள்ளாடி தையல் மந்திரப் பூமாலை
அழுந்தினளே நாள்தோறும் ஆண் மதலையில்லாமல்
புளுகொழுக்கும் மாதுமின்னுள் பேரரசன் திருத்தேவி
அழுத கண்ணீராரேட அறப்புலம்பி ஏதுசொல்வாள்
அம்புபட்ட மானனேன் அலையிலிட்ட துரும்பானேன்
கொப்பிளந்தமந்தியைப்போல் குழந்தையில்லாக் குறையாலே
ஆடாத செக்கானேன் அரசிழந்த பதியானேன்
ஓடாத தேரானேன் ஊமை கண்ட கனவானேன்

பின்னிழந்த மஞ்சானேன் வேரிழந்த மரமானேன்
அன்னையற்ற குழவியென அலையுகிறேனே சிவனே
பெற்றெடுப்பார் தங்கள் முன்னே பெருமலடாய் நின்றேனே
வெற்றுடலாய் நின்றேனே விமலரிட்ட கட்டளையோ
பரை நாதர்க்கோராத பாவிநானானேனையோ
உரைகாதர் கவிப்புலவர் உரைத்தோரை உலைத்தேனோ
உலைத்தேனோ ஏழைசொத்தை ஒதுங்கவிட்டு பறித்தேனோ
கலைத்தேனோ பிச்சையிடாக்கல்நெஞ்சியானேனோ
காணாத கடலோடி கரைசேராக் கப்பலானேன்
வீணாகநானொருதி வெறும்மலடாயிருந்தேனே
பயிராக எனக்குமொரு பாலனில்லாக் குறையாலே
கயிறற்ற பாய்மரம்போல் கட்டழிந்து வாடுறேனே
பெற்றெடுப்பார் தங்கள்முன்னே பேதலித்துவாடுறேனே
வெற்றுமலடானேனே வேதனிட்ட கட்டளையோ
காய்க்கு மந்தபருவத்திலே காய்மாறி நின்றேனே
பூக்குமந்தபருவத்திலே பூமாறி நின்றேனே
திண்ணையிலே மணற்பரப்பி சிறுதடத்தைப் பாரேனோ
எண்ணை தலைமேலே வைத்து எடுத்து விளையாடேனோ
நன்னிதமாய் நாமிருந்து நாடாண்டு தானிருந்தால்
உன்னிதமாய் ஊரிலுள்ள உற்றாரும் மற்றோரும்
ஈண்டறிய இனத்தோரும் எள்ளுடன் நீருமிறைத்து
கூண்ட குடந்தான் சுமந்து கொள்ளிவைக்கவேண்டாமோ
முன்னெற்றித் தலைசிரைத்து முகத்து முடிதானிறக்கி
அங்கங்கொண்டு கடல்வரைக்கும் அழுதுவர பிள்ளையில்லை
தெற்குத்தெருவானதிலே செல்ல மகன் கலியாணம்
ஒக்கரையும் பிள்ளையுமாய் உடனே நின்றுபார்ப்பாரும்
வேற்கொச்சை விழிமடவார் மெல்லிநல்லா ரெனைப்பார்த்து
பாற்கொச்சை நாறுதென்று பகராரோ ஒருவார்த்தை
வேண்டாமோ என்கணவா மேதினியோர் தங்கள்முன்னே
மாண்டிடுவேனிருப்பதில்லை மலடி என்று பேர் படைத்தேன்
ஆண்டவனே எனப்புலம்பி ஆனமந்திரப்பூமாலை
பூண்டவனே கோணாண்டிப் பூபனுட இருகாலை
தொழுதவள் தன் கணவனுடன்சொல்லுவாள்முன்னாகவுந்தான்
எழுதரிய பொன்பணங்கள் எடுத்துமே நான்தேசவழி
தேசவழி தவங்கள் செய்யத்தேன்மொழியாள் போறேனென்ன
வாசமுறும் பூங்குழலாள் மன்னவன்றடிதொழவே
அழுதகண்ணீர் தனைத்துடைத்து அரசர்பெருமானுரைப்பார்
புனுகொழுகுங் குழலாளே பொன்னரிய தேவியரே
புத்திரரே யில்லாமல் புகழுடைய மாந்தர்களில்
எத்தனைபேர் நமைப்பேர் லஇருக்குகிறார் மலடாக
வம்பளக்க வேண்டாங்காண் வானுதலே நீதானும்
நம்முடைய சீமையிலே நல்லமுட்டப்பதிதனிலே
உனக்கேற்றமதலையுண்டால் உடனேவந்துசொல்லுபெண்ணே
மனக்கவலை வையாதே வாய்த்த திருத்தேவியரே
தேடியதோர் பொன்கொடுத்து தெப்பெடுத்துத் தாறோமென்ன
நாடியவருரைத்திடவே நாயகியுமேதுசொல்வாள்

தென்னவரே என்னமொழி செப்பினீர் காணென்னரசே
மன்னவரே நம்மளுக்கு மதலையில்லாக் குறையாலே
வாரிப்பணங்கொடுத்தாலும் வளர்த்த பிள்ளை என்பாரே
கோரிப்பணங்கொடுத்தாலும் கொண்டபிள்ளை என்பாரே
கொத்துத்தேட்டுமச்சேறுமோ கொண்டவர் மோர்கடைவரோ
தொத்துக்குடி நமக்கதுதான் து மார்க்கங் காவலரே
ஒப்புடனே நீர்பறைந்த உரை நமக்கு அழகல்லவே
தெப்பெடுத்த பிள்ளையது தெருத்தலையில் பல்லியல்லோ
பணந்தேடிக் குமித்து வைத்தால் பச்சத்துடனே இருக்கும்
மனம்மடிப்பாய்ப் பறைந்ததுண்டால் வாழாது நம்மோட
பொன்னை மெத்தப் படைத்தாலும் பொருளை மெத்தப படைத்தாலும்
அன்ன சுற்றமிருந்தாலும் ஆயிரம் பேரிருந்தாலும்
உம்மையற்றபிற்காலம் ஒருவருண்டோ எனக்குதவி
நம்முடைய குடும்பமெல்லாம் நாடிவர வொட்டாரே
வாழ்ந்தகாலம் வாழ்ந்ததுண்டால் மனிதர்பல பேருமுண்டு
தாழ்ந்தகாலம் ஆனதுண்டால் சந்ததிதான் வேண்டாமோ
வீருக ஆண்டிருக்கும் விளங்கும் முடிராசாவே
போறேன நானொருவழி பிள்ளைத்தவஞ் செய்வதற்கு
வல்லவனே என்னுடைய வலப்பாகத் தமர்ந்தவரே
கல்லறையிற் பணமெடுத்து காவலரே தானமென
சொல்லும்மொழி தனைக்கேட்டுச் சொற்பெரிய ராசாவும்
நல்லதுகாண் தேவியரே காட்டுவழி போவானேன்
காட்டுவழி போனதுண்டால் நாதன் விதிப்படிபோமோ
ஊட்டமுடன் போனனும் ஊழ்விதிப்படிபோமோ
கூட்டுக்கிளிபோலிருந்தோம் கொடியிடையே இருபேரும்
காட்டுவழி நீபோக கர்மவிதி பயன்தானோ
புல்விளையுந் தலமறியாய் பொழுதடையுந் திசையறியாய்
நெல்காய்க்கும் மரமறியாய் நீண்டகரை போக்கறியாய்
தென்வடக்கு நேர்கிழக்கு திசைநாலுந் தானறியாய்
அன்னமே என் பெண்மயிலே ஆதரவாய்நீ தானும்
தலம்விட்டு நீ போகவேண்டாம் தவசிருக்கவேணுமென்றால்
நிலமான நிலைமைக்குள்ளே நேர்ச்சையது செய்யென்றாரே

## நடை

அந்தமொழி தனைக்கேட்டுத் திருத்தேவியாரும்
அன்னதானமுடன்சொர்னக் கொடைகள் கொடுத்தாள்
கட்டிக் கருவலப் பெட்டகந்தன்னையெடுத்து
காணிக்கை போடவே வேணதோர் பொன்னையெடுத்தாள்
எடுத்தனன் பொன்னும் பணங்களுஞ் சேர அவளும்
ஏந்திழையாளந்த மந்திரப் பூமாலையம்மை
மந்திரக் கன்னியும் வள்ளியோ டிந்திரக்கன்னி
மங்கை பிராமணக் கன்னி வடுவிச்சியோடே
சுந்தரநாச்சியுடனவள் வாள்விடை நாச்சி
சூழவே தோழியென்றெழு பெண்ணுர்களுங்கூட
வாழும்புகழான முட்டப்பதியிலவள்தான்
மங்காத்தவசிசெய்தே வணங்கித் தானமிட்டாள்

## வேறு

பணமெடுத்து பலபேர்க்கும் பாப்பார்க்குந் தானமிட்டாள்
குணமுடைய மாதுமின்னாள் கோணண்டிராசன் தேவி
ஆண்டிபரதேசியர்க்கும் அந்தணர்க்கும் நாவலர்க்கும்
வேண்டியபொன் தானமிட்டாள் வேந்தனுட திருத்தேவி
இரப்போர்க்கும் ஒப்பபோலே இணக்கமுடன் தானமிட்டாள்
பாப்போர்க்குந் தானமிட்டாள் பாலனென்று வேணுமென்ன
காதத்துக்கு க்காதவழி கல்மடங்கள் கட்டிவைத்தாள்
தூரத்துக்குதூரவழி சுமைதாங்கி நாட்டிவைத்தாள்
நீராழிவெட்டியவள் நிறைந்த கல்லுகட்டிவைத்தாள்
காரளருழவருக்கு கல்ப்பை கொழு தானமிட்டாள்
பாதைவழி போறவர்க்கு பந்தலிட்டாள் வழிதனிலே
தாதாவாய் தண்ணீர்மடம் தானுமங்கே வைத்தனளாம்
வழிதனிலே பந்தலிட்டு மடம்பதிகள கட்டிவைத்தாள்
அழிந்தகோவில கட்டிவைத்தாள் அரனர்க்கு பூசைசெய்தாள்
நந்தவனந்தானும் வைத்தாள் நடசாலே முடித்துவைத்தாள்
சந்ததிக்காய் தவசிருந்து தானும் பலதானஞ்செய்தாள்
பூங்காவனம் நட்டுவைத்தாள் புண்ணிய தானங்கள்செய்தாள்
பாங்கான வேதியர்க்குப் பாற்பசுவுந்தானமிட்டாள்
கோதானம் மாதானம் கொடுத்தாளே திருத்தேவி
மாதானந் தனைக்கொடுத்தாள் மதலையொன்று வேணுமென்ன
தளுத்த மரச்சோலையெல்லாம் சந்நிதி என்றடி தொழுதாள்
குளுந்தமரச்சோலை யெல்லாம் கோவிலென்றே யடிதொழுதாள்
தென்சுசிந்தை நாதருக்கும் திருவனந்த பெருமாளுக்கும்
பொன்னாலே கோவில்வைப்பேன் பிள்ளை தரவேணுமென்றாள்
வஞ்சமற்ற வேலவர்க்கும் வாணுவால ஜயனர்க்கும்
அஞ்சுவர்ண முடிசமைத்து அடைவுடனே வைப்பனென்றாள்
அதனாலே யொருபலனும் ஆயுளையுங் காணமல்
இதுவிதி முன்னெழுத்தெனவே இருந்தாள் முட்டப்பதிதனிலே

## விருத்தம்

மதியேசடைத்து முகம்வாடி வாடியிருந்தங்கழுதாலும்
விதியே நமக்கு வருவதெல்லாம் வீணிலழுதால் வருவதுண்டோ
கதியே நமக்கு பிரமனன்று கட்டாய்த் தலையி லெழுத்தெனவே
கெதிதான் நமக்கு எனச்சடைத்துக் கிலேசமுடனே தானிருந்தாள்

## விருத்தம்

சமர்த்தனெனப் பெயர்படைத்து மலையிலிருந் தெழுகடலைத் தாண்
[டினாலும்
இமைப்பொழுதிற் பூலோக சக்கரவர்த்தி என்று பெயரெடுத்திட்
[டாலும்
நமக்கு மண்ணைகருக் குழியிலின்னதென ஆதியிலே சூட்டும் வேதம்
அமைத்தபடிநடக்குமல்லால்நினைத்தபடிநடவாதென் றிருந்தாளன்றே

## நடை

இருந்துமனம் மிகச்சடைத்து ஏத்தமுட்டப் பதிதனிலே
திருந்துபுகழ் மாதுமின்னாள் திருத்தேவியானவளும்

வருந்திமெத்த இருந்தழுது மந்திரப் பூமாலையம்மை
அருந்ததியைப்போல் மடவாள றச்சலித்து முகம்வாடி
அறச்சலித்து முகம்வாடி அங்கிருக்கும் வேளையிலே
குறக்குலத்திலொரு மடந்தை குறிகள்சொல்லி பிழைக்க வென்ன
ஆறு வடிந்தோடுகின்ற அடைவான தடவரையாம்
ஏறுவாடி மலைதனிலே இருந்த மலைக் குறத்தியவள்
மலைதனிலே வெகுநாளாய் மழைகள் தண்ணீரில்லாமல்
சிலைவேடர் குறவருக்குந் தீன்புசிப்புமில்லாமல்
காட்டு வள்ளிக்கிழங்குடனே கனிபலதுங் கிடையாமல்
நாட்டுவழி குறிகள் சொல்லி நாம்பிழைக்கலாமெனவே
வருந்தி மெத்தவே சடைத்து மலைவேடன்றன் மகள்தான்
இருந்தமலை விட்டிறங்கி எழுந்து மலைக்குறத்தியவள்
குறத்தி கையில் நாருவட்டி குடுக்கை வட்டச்சிரட்டையுடன்
மறத்தியைப் போலுடையுடுத்து வலதுகையிற் சேயிடுக்கி
கொப்பிடுக்கி குழையிடுக்கி குறப்பெட்டியுந்தலையில் வைத்து
செப்பணைய முலைமடவாள் திசைநோக்கி நடக்கலுற்ருள்

## துடுக்கு

நடந்து சடுதியிலே நல்லவட்டப் பாறைவிட்டு
நாஞ்குமரச்சோலைவிட்டு நல்லசுனைவாவிகளும்
கடந்து நடந்தவளும் கானவனமுங் கடந்து
கட்டுடனே ஏறுவாடி ஊருஞ் சந்தையுங் கடந்து
தந்திரத்துடன் நடந்து வித்தார மலைக் குறத்தி
சந்தையும் முத்தாவெளியுந் தானவனமுங் கடந்து
கைக்கினுக் கைவட்டியுடன் கையிற் பிள்ளையுமெடுத்து
காரிமீரும்பிள்ளையுட பள்ளிவாசலுங் கடந்து
தெற்குவள்ளியூருமிட்டு செய்யிளை மலைக்குறத்தி
தென் குமரி நாடதிலே சீக்கிரத்திற் போகவென்ன
பத்திபெறவேயவளும் பெத்தப்பிள்ளை தர்மமிட்டு
பணயப்பதிகடந்து பழவூர துவும்விட்டு
சாலைவழியே நடந்து தந்திரந்தந்திரமென்ன
தாகத்துடனே குறத்தி வேகத்துடனே நடந்து
ஓலைத்தோடுங் காதிலிட்டு உடலும் மிகக்குலுக்கி
உற்றகுறப் பெண்ணவளும் உடனே சடுதியிலே
சீரணியும் பூங்குழலாள் திருத்தத்துடன் நடந்து
சிந்தைமெய்த்துச் சந்தோஷமாய் சிறப்புடனே யவளும்
காரணிகருங்குளமும் காரிவாரியூருமிட்டு
காரிகை மலைக்குறத்தி வீரியத்துடன் நடந்து
ஓடியே வழிநடந்து ஒற்றைப் பனைக் கோட்டை விட்டு
உன்னிதமாய் வக்கிரூணிப் பாறையதுவுங் கடந்து
நாடியேயவள் விரைவாய் நடசாலை வழியாக
நாட்டத்துடனே தளவாய் வைத்த மடமுங்கடந்து
காப்பாஞ்சிவமெனவே காரிகை மலைக்குறத்தி
கல்லுவிளை யூருமிட்டு கட்டுடன் வழிநடந்து
தீப்பாஞ்சியுங்கடந்து தெற்கே ஒற்றையாலுமிட்டு
சீக்கிரம் முட்டப்பதியிற் சிறப்புடனே வந்தனளே

## விருத்தம்

வந்தாள் குறத்தியொரு நிழலில் வளமாயொரு நீராழியிலே
செந்தேன் தினைமாவதனுடனே திரட்டித்தின்று பசியாறி
கொந்தார் குழலாளிருக்கையிலே கோட்டைக்ககத்தே இருந்த
[பெண்கள்
வந்தேயவளைமிகக்கூட்டி வளமாய்க்கோட்டைக்குள்போனார்

## நடை

போனாள் குறத்தியும் மானரிருக்குந் தலத்தில்
பொன்னான மந்திரப்பூமாலையம்மை முன்பிலே
தேனுருங் கோனாண்டி ராசாவும் சந்தோஷமாக
சிந்தைமகிழ்ந்தவர் வந்த குறத்தியைக் கண்டார்
கண்டுமகிழ்ந்து கலி தீர்ந்தது நமக்கென்ன
கைப்பிடித்துக் குறி மெய்ப்பா யுரைப்பையோ வென்ன
என்றபொழுது லகாளரசரவ ரோடே
இன்பத்துடனே மலையரசன் மகள் சொல்வாள்
காட்டுக் கிழங்குந் தினையும் புசித் தங்கிருப்போம்
கன்னிமார் வந்தென்மேற் சன்னத மாகு வாரிப்போ
வீட்டு வழிசென்று பிச்சையெடுக்கவும் மாட்டோம்
மெய்யல்லா லென்குறி பொய்யாகப் போவதுமில்லை
காட்டுக்குறவர்கள் வீட்டினில் தண்ணீர் குடியோம்
நாங்கள் மலைக்கன்னிமாருக்குப் பூசையிடுவோம்
காட்டுவெருகுடன் காக்காயிறைச்சியும் உண்ணோம்
கைப்பிடித்துக்குறி மெய்ப்புடன் சொல்லுவேனென்றாள்
என்றவள் நம்பிக்கையாக உரைத்திடக்கேட்ட
எல்லோருஞ் சந்தோஷமாக மகிழவே கண்டு
அன்புடன் ராசனும் சந்தோஷமாக அவளை
அக்கடவணைக்குள்ளே கிட்ட நீ வாவென்றழைத்தார்

## விருத்தம்

அழைத்திடத் தேவிகிட்ட அவளுமே வந்திருந்து
வளைத்தடத் தேவியார்தன் வலதுகை தொட்டு நன்றாய்
முனைத்த கைவரையும்பார்த்து முகக்குறி தனையும் பார்த்து
கழுத்தினிற் பலனும் பார்த்து கைப்பிடித்துரைக் கின்றாளே

## குறம்

காருலாவுஞ் சோலைமேவுங் கன்னிமலைக்குறத்தி
கருத்துடனே தேவியார்தன் கைபிடித்துச் சொல்வாள்
சீருலாவும் மலையில் வளர் தேவதைகாளெனக்கு
செப்பமுடன் குறிமுகத்தில் ஒப்புடன் வாவென்ன
அத்திமுக விநாயகர்க்க முத்தளந்து வைத்து
அடைக்காயும் வெள்ளிலையு மவள்வாங்கி வைத்தாள்
மூத்து நிறை நாழி வைத்து திருவிளக்குமேற்றி
முக்கண்ணனையடி தொழுது வித்தெடுத்துப்பார்த்து
இந்திரனே வேலவனே வந்து குறி சொல்லு

என் மலையிற் கன்னிகளே இப்போ வந்து சொல்லு
வந்து சொல்லு செந்தூரில் வடிவேலப் பெருமாளே
வள்ளிதனை மாலையிட்ட புள்ளி மயில் வாகா
மலையிலுள்ள தேவதையே மாடன் தம்புரானே
மந்திரத்திலடங்காத தந்திர மூர்த்திகளே
முழுது முத்து ராசாவே முத்துக் கறுப்பழகா
முன்னே வந்து சொல்லடவா நல்லகுறியென்ன
தெய்வங்களை யடிதொழுது பூவெடுத்துப்போட்டு
திருநீற்றைத் தானெடுத்து நெற்றியிலே பூசி
கையினிலே பிரம்பெடுத்து உடலைச்சற்றே குலுக்கி
காப்புடனே பச்சைவளை கலகலெனக்குலுங்க
அம்மே பதருதேயடி உண்மை சொல்லக்கேளு
ஆண்டமலைத் தெய்வம் வந்து பூண்டுதெடிகுறியில்
உண்மை சொல்லவொட்டாமலென் குறியைத் தியக்கி
உருட்டுதடி மந்திரப்பூமாலையம்மா கேளு
இத்தனைநாளென் குறிதான் பொய்த்ததுவுமில்லை
ஈழம் மலையாளம் மட்டு மேத்தகுறிசொன்னேன்
வர்த்தனையாய் நீ மனதிலுற்ற குறியெல்லாம்
வகைவகையாய் நானினித்தான் வகுத்துரைக்கக்கேளு
எண்டிசையுந் தாயாரே என்குறி பொய்யாது
இன்பமுடன் கேட்டவர்க்கு அன்பினுடன் சொல்வேன்
அன்றிலங்கை ராவணனும் அழகுபரிகரியும
அரியமகள் சீதைதனாலழியுமென்று சொன்னேன்
பண்டு முன்னாளாண்டிருந்த பழய முதல்போனால்
படிப்படியே கண்டெடுக்கக் குறி ளது சொல்வேன்
வென்றியுடன் வள்ளிதனையன்று மணமபேசி
வேலவனார் மணமமுடிக்க மிக்ககுறி சொன்னேன்
அன்று ஒருசொல்லுடைய அரிச்சந்திரன் தவத்தை
ஆனதொரு கோசிகனாலழியுமென்று சொன்னேன்
நன்றியுடன் நாடிழந்து நன்மகனையிழந்து
காடாள்வார் பின்னுமென்று நாயகிக்கே உரைத்தேன்
மலங்காத சுந்தரிக்காய் வாள்வீமனோடே
மடியாமற படைபொருது வாய்த்தகாவணத்தில்
இலக்கணனைக் கட்டிவைத்து எத்திசையுமறிய
ஏற்றமணஞ்செய்வனென ஏந்திழையே சொன்னேன்
காலிகன்று பொன்னுடமை போனதுவுமில்லை
கட்டுப்பெட்டிச்சேலையது களவுபோகவில்லை
ஆளடிமை கரிபரிகள் சேதப்படவில்லை
அம்மாவுன மனமதிலே நினைத்தகுறிகேளு
மெய்யாகச் சொல்லுகிறேன்வேல்முருகராணை
வேறேயொரு குற்றங்குறை இல்லையடி தாயே
கையதிலே கண்டகுறி லக்ஷணத்தைக்கேளு
காரிகையே அரசன் திருத்தேவியே நீவாடி
வாடியம்மா மந்திரப்பூமணி மாலைத்தாயே
மலைக்கனனி மாரிப்போ வந்து துலக்குகிறார்குறியை
தாடியம்மா வலதுகையைத் தந்துகுறிகேளு

தலமான ஒருமதலை தானுமில்லாதிருந்தாய்
பொன் பணங்களில்லையென்று உனக்குக் குறையில்லை
பிள்ளையில்லா மனச்சடைவு உண்டுமெடிபெருக
கண்ட க்ண்ட கோவிலுக்குக் காணிக்கையு மிட்டாய்
கருவலத்துப் பொன்னை எல்லாம் கைவசமாயளித்தாய்
அளித்ததிறலொருபலனும்மமை கண்டாயில்லை
அழகான தேவியரே உரிமையுடன்கேளு
விளக்கிருக்கத் தீத்தேடித் திரிந்தவகைபோல
வெகுதூரம் நீ நடந்து சடைத்துவிட்டாய்தாயே
கையதிலே புண்ணிருக்க கண்ணாடி பார்த்ததுபோல்
கண்ட கண்ட கோவிலெல்லாஞ் சென்று தவஞ் செய்தாய்
உய்ய உனக்கேற்ற தொருபிள்ளை யுண்டுதாயே
உடையவன ராணையுண்டு உண்மைசொல்லக்கேளு
மூத்த நயினாருக்கொரு கோவிலும் முடித்து
முழுப்பூசையும் நடத்தித் திருநாளுஞ் செய்தால்
ஏத்தரியஉலகிலுள்ளோரெல்லோரும் மகிழ
ஏந்திளையே குழந்தையொன்று ஈன்றெடுப்பாய் தாயே
பிறப்பதுவுமுந்தனுக்குப் பெண்பிள்ளை தானம்மா
பேருந்தோட்டுக்காரியெனப் பேரிடவும் வேணும்
பிறந்தாலுமுந்தனுக்கு முழுதும் பிள்ளையில்லை
பெருமையுள்ள தேவியரே உரிமையுடன் கேளு
அன்றிரவு முகூர்த்தமதில் ஆயிளையே தாயே
அடுத்த கோட்டைதனிலிருக்கும் அரசர்குலத்தேவி
கொந்தளப்பு ராசனுக்குக் குழந்தையொன்று பிறக்கும்
குமரப்ப ராசனென்று அவன் வளரவேணும
இன்னமுண்டு சரிவய தாயிவர் வளரும் நாளில்
ஏந்திளையே மந்திரப்பூ மணிமாலைத்தாயே
பன்னிரண்டு வயசதிலே தோட்டுக்காரி தன்னை
பாலன் குமரப்பனுக்குப பெண்கேட்டுவருவார்
மாட்டோமென்று நீங்களப்போ வமபுசொல்வதாலே
வாயமிட்டு வேட்டையாடி எடுத்துக் கொண்டுபோவான்
வாட்டமில்லா மகளாலே முட்டப்பதியழியும்
வந்தகுறி லட்சணத்தை வகையுடனே கேளு
உரிமையுடனிருபேரும் யுத்தமது செய்து
ஓவியமே மடிவார்களுந்தன் மகளோடு
இருவருமே வேள்வியிலே இறந்து பிறப்பார்கள்
என்றுமலைக்குறத்தி யன்று குறிபெருக்கினளே

## நடை

வன்னமுள்ள மார்துமின்னாள் மலைக்குறத்தியானவட்கு
அன்னசொர்ணமுங்கொடுத்து அனுப்பி விட்டாள் சடுதியிலே
வன்குறத்தி போனதற்பின் வடிவான கோனாண்டிராசன்
கண்ணாளர் தனையழைத்து கனமலையில் மரங்கள் வெட்டி
வெட்டி நன்றாய் பணிப் படுத்தி விதம்விதமாய் வேலை செய்து
கட்டுடனே மாந்தயரால் காவலவனப்போது

வாய்த்த புகழாகவே தான் வளரும் முட்டப்பதி தனிலே
மூத்தநயினர் தமக்கு முடித்தாரே கோவிலொன்று
கோவில்வைத்துக் கலசமாட்டி குருபூசை தானடத்தி
ஆவலுடன் கோவிலிலே அரசனுட திருத்தேவி
வாசமுடன் திருப்பதியில் வந்து வசனமிருக்க
ஆசையுடன் தீர்த்தமாடி அவள் மாற்றுதானுடுத்தி
அன்புடனே நீறுசாற்றி அன்னந் தண்ணீருந்தாமல்
தன்மையுடனொருச் சந்தியாய் தளிர்மலர் போட்டடி தொழுதாள்
பாலனுக்காய் தவசுபண்ணி பரமசிவன் றனைத் தொழுது
ஆலமுண்டோன் திருப்பாதபடி தொழுது தானிருந்து
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியவள் தான்புலம்பி
கண் துயிலும் வேளையிலே கனவு கண்டாள் மாதுமின்னாள்
மைவிழியாள் கண்ணதிலே மாயக்கனுக் காண்பாளாம்
தெய்வலோகப் பொற்கிளிதான் திருமடியில் வரவுங்கண்டாள்
பையரவம்மடியேறிப் படம்விரித்து ஆடக்கண்டாள்
மந்திரவாளுறைகழற்றி மடிதனிலே வைக்கக்கண்டாள்
வேட்டுவனுங் கூடுகட்டி விரையக் குஞ்சு பொரிக்கக் கண்டேன்
காட்டக்கெட்டு வெற்றிலையை கைநிரம்பத்தாவுங்கண்டாள்
அன்றுராவு விடிந்ததற்பின் அரசனுட முன்பில்வந்து
வந்துபணிந்தடிதொழுது மங்கை நல்லாள் தேவியரும்
கண்டகண்ட கனவையெல்லாம் காவலர்க்குச் சொல்லுவாளாம்
இன்றுகண்ட தெரிசனத்தை என்னரசே சொல்லவுங்கேள்
தெய்வலோகப் பொற்கிளிதான் திருமடியில் வரவுங்கண்டேன்
பையரவம் மடிதனிலே படமெடுத்து ஆடக்கண்டேன்
மந்திரவாளுறைகழற்றி மடிதனிலே வைக்கக்கண்டேன்
தந்திரமாய்வேட்டுவனும் தானேகுஞ்சு பொரிக்கக்கண்டேன்
என்றமொழிதனைக்கேட்டு ஏந்தல் மனந்தனிலடக்கி
மங்கைகண்டகனவுதான் மாயக்கனுவாமெனவே
சந்தோஷமாய்ச் சிரித்து தன்தேவியோடு சொல்வார்
இந்தக்கனுகண்டபோது இனிநமக்கு குறையில்லைகாண்
பொன்னரிய தேவியரே பிள்ளையுண்டு நமக்கெனவே
மன்னவரும் தேவியரும் மகிழ்ந்திருந்தார் கோவிலிலே

## வேறு

கோவில்புக்கியே இருவருந்தான் கொஞ்சிமருவியே தானிருந்தார்
ஆவிமருகியே இருவருந்தான் அரைத்தசந்தனம் பூசிக்கொண்டு
வாராடுங்குழல்மாமடவாள் மன்னவனுருடதேவியரும்
தாராடும்நல்லபாம்பதுபோல் தானும்நலமிகப் பாராட்டி
அன்புருக இவர் மனமுருக ஆசைநலமது பாராட்ட
இன்புருக அவள் தனமுருக ஈருடலும்ஓருடலாய்
மூலரசத்தோடே தானவர்கள் போகமனுக்கின்றவேளையிலே
சாலநாதவிந்துருவாகத்தானே கருவது உருவளர
பணித்தகருக்குழிபொருப்பதிலே பாரவுதானனும் காவலாக
தனித்தகருவளர்விவரமதை தானுரைக்கிறேன் கேளுமையா

## வேறு

என்றேதுரை கோணண்டியிராசன் மனம்மகிழ
இசைந்தே மந்திரப்பூமாலையும் இரதிமதன்போல
இன்பமுற அறுகு நுனிபனிபோல் விந்துசாட
ஏற்றே நாதங்கௌவிப்பையை மூடப்பிராணன் கூட
அன்றேவந்தபானன் அருகாகக்காவல்செய்ய
அரியதொரு உதானன் கருவளர்க்க வினைகலா
ஒன்றிற்கடுகிரண்டில் மல்லி மூன்றில் மிளகாக
ஓர்நாலதில்வரையஞ்சிற் குமிளியெனவளர
வளரநெல்லிக்காயாமாறில் எழில்புன்னைக்காயாம்
வளமாய்ப் பஞ்சபூதம் பஞ்சவர்னமெட்டிற்றோன்றும்
தளராநவதினத்தில் காக்கை முட்டை யெனவளர
தசம்பூரணை கோழியண்டமெனவே உருவளர
வளரமதியொன்றில் வாழைப்பூவின்வடிவாக
வாய்த்தமதிரண்டில் தலைகழுத்து உருவளர
பழுதேயிலா திரிமாசத்தில் கால் கைசந்து உருவாய்
பகவானருளாலே நர்வில் பாதந்துண்டம்வளர
துண்டஞ்செவி கண்ணாகம் தோன்றஅஞ்சு ஆறில்
தோகைமெத்தமயங்க அயல்தோகையருமறிய
மண்டைமுதலெங்கும் நரம்பெலும்பு மயிர்தோன்ற
மாசமதுஎழில் மலசலம் போம்பாதையிரண்டும்
உண்டாகிட மாதமெட்டிலுண்ட அன்னசாரம்
உச்சிவழிசென்று உயர்தொப்பூழ் வழிமாறும்
பண்டைமுறைபோல ஸ்தனபாரமதுங்கறுக்க
பாவைகற்பத்துற்ற கருக்குற்ற உயிர்பரவ
பரவநவமதியிற்சிசு பரமன்றனைநோக்கி
பாங்காயறிவோடு நின்றுதவமேபுரிந்திடவே
அரவமது தாயாரறிவாகப் பிள்ளையூரும்
அப்போ பக்கத்துள்ளோர்!வந்து ஆதித்தர்க்குப்பொங்க
பொங்கமதிவளர மந்திரப்பூமாலையும் மலைய
புகழாகவே பக்கத்திலுள்ள பேதையர்கள் தேற்ற
பங்கமிலாப் பாவையர்க்குப் பரமனருளாலே
பத்துமதிவரவே யண்ணல் பாங்கிலுடன் சொல்வார்

## வேறு

பத்தான மாசத்திலே—அந்தப்—பங்கயப் பெண்கொடியாள் தனக்கு
மெத்த உடல்வருத்தம்—அவள்—மேனிதளர்ச்சியைகண்டு மன்னன்
இட்டத்துடனவள்க்கு-நல்ல—ஈத்துபபுரைகட்டவேணுமென்றார்
கட்டிமுகிக்கவென்ன-தெய்வக்-கம்மாளர் தன்னையருகழைத்து
அழைத்துச்சடுதியிலே-அழகான-தோர்நல்லமரந்தறித்து
தழைக்கபபணிபடுத்தி-உடன்-சட்டமாயீத்துப்புரைமுகித்தார்
ஈத்துப்புரைதனிலே-நல்ல-ஏந்திழை கோணண்டிராசன் தேவி
மாத்துடுத்து நீராடி-அவள்-மங்களமாகவே பொங்கியுண்டு
பாப்பார்க்குதானமிட்டு-பசும்-பாலர்லே பொங்கிக்குரவையிட்டாள்

காப்பாய் திருவிள்மே-எனை-காட்டிக்கொடாதேயுமென்தெய்வமே
மன்னர்க்குமெந்தனுக்கும்-ஒரு-மாயம்வராம லகாத்தருள்வாய்
என்றேபுலம்பியவள்—புது-ஈத்துப்புரைக்குள் புகுந்தனளாம்

## விருத்தம்

ஈத்துப்புரைக்குள்ளபுகுந்து எடுத்த குடத்து நீருடனே
வாய்த்த எழுபேர் தோழியர்கள் வலமுமிடமுஞ் சூழ்ந்திருக்க
சாய்த்துப்பிடித்துப் தலைதாங்கி தடமாய்ச்சிலபேர் மனந்தேற்ற
வாய்த்த வயிறு முன்னேகவசமாயழைத்தார் மருத்துவத்தை (1)
திருந்திய தேவியார்க்குத் திங்கள்தான் திகைத்தபோது
சிரந்தனிலெழுதிவைத்த தெய்வமே துணை நீயென்ன
கருந்திய ஒட்டன்றன்னை காவலர் வரவழைத்து
வருந்தியே மருத்துவத்தை வாக்குடனழையுமென்றார் (2)

## நடை

அந்தவுடனே ராசன் ஆனஒட்டனை யழைத்து
சுந்தரஞ்சேரோட்டா நீ சொல்லும் மொழிதனைக்கேளு
எத்தனைபேர் மருத்துவத்தாளிருந்தாலு மிப்பொழுது
புத்தியுள்ள மருத்துவத்தாள் பொன்னுருவி என்பவளை
நாட்டமுடன் நீயுஞ்சென்று நளினமுடனே யவளை
வாட்டமின்றியே கூட்டி வாக்குடனே வாருமென்றார்
என்றபொழுதே யோட்டன் ஏந்தலுரை தான் கேட்டு
நன்றெனவே தானடந்து நாயகமே துணையெனவே
முட்டப்பதி நாடும் விட்டு மூணு முக்கு விளையும் விட்டு
தட்டாரிறப்பும் விட்டு சாயப்பனை மூடும் விட்டு
வாச்சான்குளமும் விட்டு வாகையடிக்கோவில் விட்டு
நாச்சியார் தன் தோப்பும் விட்டு நந்தாவனத் தோட்டம் விட்டு
பூமருவும் வனங்கடந்து புகழுடைய ஒட்டனவன்
தாமருவும் மருத்துவத்தாள் தானிருக்கும் பதியில் வந்தான்
வந்து நின்று தான் விளித்தான் மருத்துவங்கேட்டெழுந்திருந்து
இந்த நடுச் சாமத்திலே எவனடவா விளித்ததென்ன
விளித்தேன் காண்முட்டப்பதிவேந்தனுட தேவியற்கு
தெளிந்தபுகழ் மருத்துவமே திங்கள் பத்துந்திகைந்தது காண்
உனைக்கூட்ட எனை விடுத்தார் உடனே நீ வரவேணும்
எனவுரைத்த ஒட்டனுடன் ஏதுரைப்பாள்மருத்துவத்தாள்
பண்டொரு நாளங்கே வந்து பட்டசளன் மெத்தவுண்டு
தங்காமலிங்குவந்தேன் தானொட்டா சொல்லவுங்கேள்
என்புருஷன் கிழவனப்பா ஏழு எட்டுக் குழந்தையுண்டு
பொன் களஞ்சு ஒத்தொழிய புறப்பட்டும நான்வருவேனோ
வருவேனோ என்றுரைத்த வாணுதலே மருத்துவமே
அருமையுடனுந்தனக்கு அரசன் திருமுன்புரைத்து
ஒரு களஞ்சு பொன்தருவேன் ஒவியமே எழுந்திரெடி
ஒரு களஞ்சு பொன்னதுக்கு ஊருவிட்டு வருவேனோ
இரு களஞ்சுப் பொன்தருவேன் எழுந்திரெடி மருத்துவமே

இரு களஞ்சுப் பொன்னது தானிருந்தவிடச் செலவல்லவோ
மூன்று களஞ்சுப் பொன் தருவேன் மொய்குழலே எழுந்திரெடி
மூன்று களஞ்சுப் பொன்னதுவென் முற்றத்திலேமுருங்கைதரும்
நாலு களஞ்சு பொன் தருவேன் நன்னுதலே வாருமென்றான்
நாலு களஞ்சுப் பொன்னதுவென் நடைப்படிக்குங் காணாது
அஞ்சு களஞ்சுப் பொன் தருவேன் ஆயிழையே வாருமென்றான்
அஞ்சு களஞ்சுப் பொன்னெனக்கு அருமையல்ல நீ போடா
போடாவென்றுரைத்தபோது புத்தியுள்ள ஒட்டனவன்
ஆடரவிலே துயிலும் அச்சுதரை மனதிலெண்ணி
ஆறு களஞ்சு பொன் தருவேன் அதட்டாமல் வாருமென்றான்
ஆறு களஞ்சுப் பொன்னதுதானரைமடிக்கும் பற்றாது
ஏழு களஞ்சுப் பொன் தருவேனெழுந்திரெடி மருத்துவமே
ஏழு களஞ்சுப் பொன்னதுதான எந்தனுக்கும் பற்றாது
எட்டுக் களஞ்சுப் பொன் தருவேன் ஏந்திழையே வாருமென்றான்
எட்டுக் களஞ்சு என்றபோது எட்டிநின்று தலையசைத்து
வாடாவென் திருஒட்டா வார்த்தையொன்று சொல்லக்கேளு
கூடரண்டு களஞ்சு வைத்தால் குடிகேடு வந்திடுமோ
என்றவுடனே ஒட்டன் இன்பமுடனே நகைத்து
கதறவேண்டாம் மருத்துவமே கருத்துடனே சொல்லவுங்கேள்
பத்துக் களஞ்சுப் பொன் தருவேன் பாவையரே எழுந்திரென்ன
பத்துக் களஞ்சொத்தபோது படபடன எழுந்து சொல்வாள்
பாங்கான தூதுவனே பரிவுடனே நீ கேளு
நான் கிழவி உன்னோடே நடக்கவுந்தான் மாட்டேனென்ன
ஏ பெரிய மருத்துவமே என்னுரையை நீ கேளு
நீ கிழவியானாலும் நெஞ்சித்திடம் போய்விடுமோ
அரைத்தாலுஞ்சந்தனந்தான் அதன் வாசம் போய்விடுமோ
பசு கிழடுவானாலும் பாலுருசி போய்விடுமோ
சொற்பெரிய மருத்துவமே செய்தியொன்று நீ கேளு
குப்பையிலே போட்டாலும் குன்றுமணி மங்காது
ஆனையதுகொடுவரட்டோ அசையாமற் கொடுபோக
ஆனைகொண்டு வந்தாலும் அசையுமடா வென்னுடம்பு
குதிரையது கொடுவரட்டோ குலுங்காமற் கொடுபோக
குதிரை கொண்டுவந்தாலும் குலுங்குமடா என்னுடம்பு
அஞ்சாதே ஒட்டாநீ ஆதரவாயுன்னுடனே
பஞ்சுவெட்டுங் கம்பூன்றி பையப்பையவருவேனப்பா
என்றுசொல்லியிருபேரும் இமைக்கும்முன்னேகடிதாக
சென்றாரே சடுதியிலே சிறந்த முட்ட பதிதனிலே

## துடுக்கு

முட்டப்பதியில் மருத்துவத்தாளும்
முறையுடனேவந்த ஒட்டனுடனே
இட்டமுடனே நடந்தவள்தானும்
ஈத்துப்புரையிலே வந்தனளப்போ
வந்த மருத்துவந்தன்னையும் பார்த்து
மந்திரப் பூமாலையம்மையுஞ் சொல்வாள்
சுந்தரப் பெண்ணே மருத்துவத்தாளே

சீக்கிரம் வராதசெய்தி ஏதென்றாள்
வாராதிருப்பேனே உன்பேருகேட்டால்
மக்களெனக்கு நாலாறுண்டு தாயே
நேராகத்தேடப் பிராயமுமில்லை
நினைக்கும்பொழுதெமைத் தேடிடுமன்னே
பிள்ளைகளுக்கன்னந் தண்ணீர்கொடுத்து
புத்திசொல்லிமனை தன்னிலிருத்தி
கள்ளர்களென் வீட்டில் கொள்ளையிடாமல்
காத்திருக்கச் சொல்லி ஆளுமிருத்தி
அந்தஇடத்திலவர்களுக்கன்னம்
ஆதரவாகக் கொடுக்க ஆள்வைத்து
சந்தோஷமாகவே இங்கு நான்வந்தேன்
தாயமாடினேன தனாலே சற்றே
வரும்போது நல்ல எதிர்ப்பதுங் கண்டேன்
மாயனருளாலே மோசம்வராது
அருமைக்குழலாள் மருத்துவத்தாளும்
ஆதரவாகவே வார்த்தையுஞ் சொல்லி
சொல்லிக்குடத்திலே தண்ணீரும்வைத்து
துறும்புக்குளிக்குள்ள சாத்திரஞ் செய்து
நெல்லளந்து கொத்தியாருக்குவைத்து
நெஞ்சமுடமபுக்கு எண்ணையுமிட்டு
வல்லமருத்துவத்தான் தந்தனக்கு
வசமாயிருக்கவே முக்காலியிட்டு
நல்லாயிருக்கவே தேவியாருக்கு
நலமாய் வயிறு நொந்து தியங்கவே

## வேறு

அன்னேரம்மதிமயங்கி அசைந்து விழத்தேவியரும்
முன்னேகத்திருவயிறு விளித்தபயமிட்டனளே
அபயமுடன் முறைமமென்பாள் ஆத்துமமுஞ் சோருதென்பாள்
பகையோகாடுணந்தனக்கு பலத்தகருதரித்ததெடி
வன்னமுள்ளதேவியரே மானுரேமருத்துவமே
என்னையினித்தொடாதுங்கோ இப்போது நானிறப்பேன்
இறந்திடுவேனெனவுரைத்த ஏந்திழையாள் முகம்நோக்கி
சிறந்தமுக மருத்துவத்தாள் தேற்றமொழி சொல்லுவாளாம்
அறப்பதறிவாய் குழறி அபயமிடாதேதாயே
பிறக்கும் பிள்ளை பதறாதே பேதலிக்கவேண்டாமென
பிள்ளையல்ல மருத்துவமே பெருவயிறு கொண்டனெடி
உள்ளமொழி சொல்லாமல் ஒளிக்குகிறாய் மருத்துவமே
வம்பிலே நான் தவசிருந்து வலுநெருப்பையேற்றேனே
கொம்பிழந்த மந்தியைப்போல் குழந்தையினால் மடியுகிறேன்
மடியுகிறேன் தாய்மாரே மன்னவர்க்குச் சொல்லுமென
அடிபிடியாய் வயிற்நோக அலறிமண்ணில் விழுந்தாளே

## நடை

ஓங்காரமிட்டந்தப் பூமாலையம்மை
உளறிப்புரண்டி விழுகிறநேரம்
பாங்காகத் தேவிமார் தாங்கிப்பிடித்து
பதருதேயம்மா நீஎன்றவர்சொல்ல
சொல்லும்பொழுது மருத்துவத்தாளும்
சித்திரக்குப்பியிலெண்ணெயெடுத்து
நல்லகுழியலிலெண்ணையைவிட்டு
நன்றாகஓதி வயிற்றிலே போட்டு
தயிலமெடுத்து வயிற்றிலே போட்டு
சந்திவந்துபிறப்பதற்காக
ஒயிலாகக் கன்னிக் குடமுமுடைய
உருத்திரண்ட பிள்ளை தானும்பிறக்க
பிறக்கவே கண்டு மருத்துவத்தாளும்
போதவே சந்தோஷமாக மகிழ்ந்து
சிறக்கவே பொன்னுங்கலத்தையெடுத்து
செய்ய மருத்துவத்தாளேந்துவாளாம்
கோனாண்டி ராசாவும் மந்திரிமாரும்
கோட்டைப் படையெல்லாங் கேட்டுமகிழ்ந்தார்
தானாண்டிருந்த பரிகலத்தோரும்
சந்தோஷப்பட்டார் படைத்தலைவரும்
அப்போது நல்ல மருத்துவத்தாளும்
அழகு குழந்தை தனையுமெடுத்து
கொப்பாடை நீக்கிக் குழந்தையெடுத்து
கொப்புளறுத்துக் குரவையுமிட்டார்
அப்போது கொத்தளப் பூராசன் தேவி
அந்தநேரமொரு ஆண்பிள்ளைப் பெற்றாள்
பெற்றாரிருவருமோர் முகூர்த்தத்தில்
பேரும் குமரப்பராசனெனவே
இருவளர் பூமாலையம்மன்மகட்கு
தோட்டுக்காரியென நாமமுமிட்டு
இருவருமே ஒரு முகூர்த்தம பிறந்து
இங்கிதமாகவே யங்கேவளர
தோட்டுக்காரிதான் பிறந்தகலத்தில்
சூழ்ந்துமடவார் பொலியுமளந்தார்
வாட்டமில்லாத மரகதமமுத்து
மாணிக்கத்தங்கப் பொலிவும பொலிந்தாள்
வாழும்மடவார் பொலிந்தபொலிவை
மகிழ்ந்து மருத்துவத்தாள் வாங்குவாளாம்
ஏழுசுமடும் எருதிலுமேற்றி
ஏந்திழையாள் பொலி கொண்டுபோனாளே

## வேறு

மருத்துவத்தாள் போனபின்பு திருத்தேவியாரும்
வளமுடனே மதலைதன்னை முலைதனிலே ஊட்டி

திருத்தமுடன் நீராட்டி எடுத்துமே தாலாட்டி
சீனியுடனே பாலுந்தெளித் தவளுள்ளூட்டி
வெள்ளானைக் கொம்பதனுற் விவரமுடன் செய்த
வீருனநாகமணிதொட்டி லதன்மேலே
பிள்ளை தனையே கிடத்திப் பொற்பணிகளணிந்து
பிரியமுடன் தாயாரும் தாலாட்டுவாளே

## தாலாட்டு

தாராட்டும் வேல்விழியாள் தாரரசன் திருத்தேவி
சீராட்டிப் பிள்ளை தன்னைச் சிறக்க தாராட்டுவாளாம்
மணியோ மணிவிளக்கோ மரகதக்கண்ணூமு தா
கெணியாக வந்தெமக்குக் கிட்டாத ரத்தினமோ
மானுர்கள் மனமகிழ வையகத்தோருமமகிழ
தேனுராய் வந்துதித்த சிறந்தமணி விளக்கொளிவோ
பெண்ணரசாயெங்களுக்குப் பேராசை தீர்த்தவளோ
கண்ணுனகண்மணியோ கறைக்கண்டனுர் தந்தகண்ணே
பார்த்தவர்கள் மனமகிழப்பாலகியாள் நமக்கெனவே
மூத்தநயினுரிரங்கி முக்கணையுடன் தந்தகண்ணே
பண்டிருந்தோர் செய்தவத்தால் பாலகியாய் வந்தாளோ
என்றுசொல்லி தாலாட்டி இன்பமுடனிருந்தனளாம்

## வேறு

இருந்து மனம்மகிழ்ந்து மந்திரப் பூமாலையம்மை
எடுத்து மடிமீதினிலேவைத்து—(எடுத்து)
வைத்துமகளையெடுத்து முத்தமிட்டுப்பால்கொடுத்து
மகிழ்ந்து மதலைமொழிகேட்டு—(மகிழ்ந்து)
கேட்டரசனுமுடனே நாட்டமுடனே பிள்ளைக்கு
கிண்கிணியும் நூபுரமும் பூட்டி—(கிண்கிணியும்)
பூட்டியேயலங்கரித்துத் தோட்டுகாரியம்மனுக்கு
போதவே பலபணியணிந்து—(போதவே)
அணிந்து சிலம்புதண்வட அரைவடங் கிண்கிணியும்
அழகாகவேயணிந்து நன்ருய்—(அழகாக)
நன்ருகவேபணியும் நாடியே அலங்கரித்து
நாளொருமேனியாய் வளர்த்தாளே—(நாளொரு)

## வேறு

வளர்ந்தாளிளங்கிளிபோல்-நல்ல-வார்ப்புருக்கிவளர்த்ததங்கம்போல்
குழந்தைப் பிள்ளையவள் தான்-புதுக்-கோலவரிக் குயில்போலழகாய்
அழகாய்ச் சிலைபோலே- அந்த ஆயிழையாள் தோட்டுக்காரியம்மை
இளகாதோடணிந்து-கையி-லேற்றதோர் பச்சைவளையணிந்து
இட்டத்துடன்வளர்ந்து-வர-ஏழெட்டு நல்லவயதாக
பட்டாடையுமுடுத்து-நல்ல-பாடகந்தண்டைசிலம்பணிந்து
வயதுமிகுந்துவர-நல்ல-வஞ்சியிளமயில் போலவேதான்
மயிலபோலழகுடைய—இளம்-மங்கை தோட்டுக்காரியம்மனுக்கு
மாணிக்கப்பொற்பணியும்—வடி—வானதோர் பச்சைவளையலதும்

ஆணிப்பொன்மாலையுடன்-நல்ல-ஆபரணம்-முத்துமாலையுடன்
மாலைவடமாலை-மணி-மந்திரப்பூமாலை தன்மகட்கு
சோலைக்கிளிமொழியாள்-பசுந்-தோகைதோட்டுக்காரியம்மனுக்கு
பெண்ணுக்குப் பெண்ணழகி-நல்ல-பொன்னுந் தோட்டுக்காரியம்ம
[னுக்கு
திண்ணமுடனுடுகொப்பும்-உச்சி-திருவும்பிறையுடன் சுட்டிகளும்
பாதிப்பிறையுமிட்டு-உடன்-பந்துவைத்துக்கோதிகொண்டைகட்டி
கோதிமயிர்முடித்து-நல்ல-கொண்டைக்குப்பிச்சிப்பூமாலைசுற்றி
காதுகுத்தித்தோடுமிட்டு-இரு-கண்ணுக்கு ஒப்பான மையெழுதி
மாதென்னுந்தோட்டுக்காரி-சிறு-வஞ்சியிளமயில்போலழகாய்
கதிரோனொளியதுபோல்-உள்ள-கட்டானமுட்டப்பதிதனிலே
பதினாறுதோழியுடன்-நல்ல-பைந்தொடியாள்தோட்டுக்காரியம்மன்
தங்களிலேபந்தடித்து-நல்ல-சரசமிட்டு விளையாடிக்கொண்டு
பெண்களெல்லாமொருப்போல்-எங்கும்-புகழும்மணிக் கோட்டை
[யானதிலே
ஒருப்போலேபெண்களுடன்-இந்த-உலகையரசாளும் ராசன்மகள்
பருவ வயதாக—வளர்-பன்னிரண்டுவயதாகிடவே
கோனாண்டிராசனு—மகள்—தானுங்கொலுவதில்வீற்றிருக்க
தானுமவளுடைய-தோழி-தங்களுடனிருக்கின்றநேரம்

## நடை

இப்படியே தோட்டுக்காரி இவளிருக்கும் நாளையிலே
சொற்பெரியமலைமார்பன் சீர்பெரியராசாக்கள்
கொந்தளப்பூராசாவும் கோனாண்டிராசாவும்
இந்திரன்போல் பகுத்தாக இருபேருங்கொலுவிருந்தார்
தட்டாரிறப்பதிலே தங்களுடகோட்டையிலே
கொட்டமுடனேவளர்ந்தார் குமரப்பராசரவும்
வளர்ந்தவரும் பன்னிரண்டு வயதுவரும் நாளையிலே
இளந்தாத்துத்தோழருடன் இலங்குகுமரப்பராசன்
கட்டுடனே உடையுடுத்து காதில்வர்னப்பணியுமிட்டு
பொட்டுமிட்டு நீறுசாற்றி புனுகுசவ்வாதும்பூசி
பொற்சரிகைத்தலைப்பாவுங் பொன்னழுத்துத் துப்பட்டாவும்
வச்சிரமுகத்தழகும் வலதுகையிலுடைவாளும்
நடையுடையும்பாவனையாய் நாடாளும் ராசனுட
படைவெல்லுமதிசூரன் பாலன் குமரப்பராசன்
மந்திரிமார்தான் சூழ மன்னன்குமரப்பராசன்
தந்திரியும் சேவகரும் தாண்டும்படைத்தலைவருடன்
கொந்தளம்பூ ராசன்மகன் கொலுவாகவேயிருக்க
நன்றாகக்கோட்டைக்குள்ளே நாடும்படைதன்னுடனே
குருவருளைமறவாத குமரப்பராசாவும்
ஒருப்போலே தங்களுட உள்க்கோட்டைக்குள்ளிருந்தார்

## வேறு

தட்டாரிறப்பதில் வட்டைக்கோட்டையிலே
தானாகவேயவரங்கேயிருக்க

வட்டப்பரிசை கைக்காரொருபத்தி
வங்காளத்தோட்டியருமொருபத்தி
சிங்காரமான துரைமக்களோடே
சேவிக்கும் பாளையக்காரரொருபத்தி
பங்காக வெற்றிமுரசுமடிக்க
பாளையக்காரருஞ் சேவித்துநிற்க
சேருங்குதிரையும் பட்டாணிமாரும்
செங்கண் மதயானை மாகுத்தன்மாரும்
பாரத்துரைமக்களுமொருப்போலே
பல்லாக்குவல்லையக்காரருங்கூட
பட்டுக்குடையும் பவளக்குடையும்
பத்திபத்தியாக முத்துக்குடையும்
கட்டானசேருடி வட்டக்குடையும்
காரியக்காரருங்கூடச்செரும
வாளும்பரிசை வளைந்துசெரும
மட்டில் லாக்கோடிப் பெரும்படையோடே
ஆளுக்கழகன் குமரப்பராசன்
அரசர்பெருமான் கொலுவிருந்தாரே

## விருத்தம்

கொலுவிலிருந்த மன்னன்குமரப்பராசன்றானும்
வலுவுடன் கோட்டைபார்க்க மந்திரிமார்களோடே
பெலமுடன்படைகளோடு புரவிகள்சீனிவைத்து
தலமதைவிட்டுமன்னன் தானெழுந்தருளினரே

## வேறு

எழுந்துபடைகளோட வளைந்துகுதிரைகளும்
இடிபோல்வெடிமுழங்க இடம் மானங்கள்களடிக்க
வளைந்துபடைசெரும மந்திரிமார் சூழ்ந்துவர
வன்னியருஞ் சென்னியரும் மட்டில்லாப்பெரும்படையும்
மன்னன்குமரப்பராசன் முன்னவரெழுந்தருளி
மாவேகத்தோடவனும் மடங்கலெனவெழுந்து
பொன்னுமுடிக்காவலவன் மன்னன்குமரப்பராசன்
போதப்படையோடே மன்னனரபாரமாகவேதான்
குஞ்சம்வெஞ்சாமரைவீசக் கொலுவாயெழுந்தருளி
குஞ்சுராமச்சிறுக்கனும் கூடவேயடைப்பமிட
பஞ்சவர்னத்திவெட்டிகள் பல்லக்கின்முன்னேபிடிக்க
பக்கத்தில்குதிரைக்காரரொக்கவேசெருமிநிற்க
தட்டாரிறப்புவட்டக் தங்களுடகோட்டைவிட்டு
தத்தித்தத்தியாகவேதான் குமரப்பராசமன்னன்
முட்டப்பதிக்கோட்டைதனைக் கிட்டச்சென்று பார்க்கவென்ன
முடுக்காய்ப்பல்லக்கிலேறி துடுக்காய்க்குமரப்பனும்
பூவண்டன்மார்காவிக் கொண்டுபோமெனத்துரத்திக்கொண்டு
போருக்குநல்வீரமுள்ள குமரப்பராசாவும்
மாவண்டரைவெட்டிவெல்லும் மன்னன்குமரப்பராசா
மட்டில்லாப்படைகளோடே வந்தவனுங்கோட்டைபார்த்தான்

## நடை

ஒன்னலரைவெட்டிவென்று உலகமெல்லாம் புகழ்படைத்த
மன்னனுக்கும்-மன்னனவன் வடிவன் குமரப்பராசன்
தானிருந்து அரசாண்ட தட்டாரிறப்புமிட்டு
கோனண்டிராசனுட கோட்டைதனையும் பார்த்தான்
நாலுகோட்டைவாசலிலும் நாட்டிநிற்குந்தோரணமும்
சேலானகொத்தளமும் சிறந்தமணிமேடைகளும்
கொத்தளத்துப்பருவெடியும் கோட்டையுட சித்திரமும்
சுற்றிலுள்ளகரிபரியுங் சூதானவாசல்களும்
கடக்கவொண்ணாதகிடங்கும் கருவிகள சேர்த்திருப்பதுவும்
அடக்கமுள்ளகோட்டையது ஆரும்வெல்லப்போகாது
சீரானகோட்டையதன் சிறப்பையெல்லாந்தான்பார்த்து
பர்ராளுங்கொடைக்கரத்தான் பார்க்குமரப்பராசா
கண்டுநன்றாய்க் கோட்டைதனைக்கனபிரியமாய் மகிழ்ந்து
நன்று நன்று இக்கோட்டை நல்லவேலை என்றுசொல்லி
அன்று நன்றாய் மனமகிழ்ந்து அதிசயமாய்நிற்கையிலே
குன்றாத கொடைக்கரத்தான் கோனண்டிராசன்மகள்
வண்டாடும்பூங்குழலாள் வளர் தோட்டுக்காரியம்மை
கொண்டாடியிவர்கள்வந்து கூடிநிற்பதறியாமல்
வந்தமன்னன் தன்னுடைய வளமைதனையறியாமல்
சுந்தரஞ்சேருங்குழலாள் துடியிடையாள் தோட்டுக்காரி
வெளிகாணாதேயிருந்த மெல்லி நல்லாள் தோட்டுக்காரி
அழிவுவருங்காலமதில் அறையைவிட்டு எழுந்திருந்து
பதினாறுதோழியர்கள பக்கத்திலே சூழ்ந்துவர
விதிவாறதறியாமல் மேலான மேடையிலே
கட்டானமேடையிலே கருத்தாகப் பூட்டிவைத்த
திட்டிவாசல்தனைத்திறந்து திருவெளிச்சங்காண்பதற்கு
வல்லாரும்பூங்குழலாள் வளர் தோட்டுக்காரியம்மை
எல்லோருங்காண்பதற்கு ஏகவெளியாய்த்தெரிய
மதமானபெண்களெல்லாம் வரும் விதியை அறியாமல்
கதவேழுந்தான் திறந்து கையினிலேபந்தெடுத்தாள்
பந்தடித்துவிளையாட பாங்கியர்கள் தன்னோடே
கொந்தளப்பூமேடையிலே் கூடியே பந்தாடுவளாம்

## வேறு

பந்தெடுத்தாடிவாருள்-தோட்டுக்காரி-பந்தெடுத்தாடிவாருள்
பந்தெடுத்தாடியே சந்தோஷமாகவே
பக்கத்துத்தோழிய ரொக்கஒருப்போலே
தந்தந் தரிகிட தரிகிட தெர்மெென
சங்கையாய் செங்கைவளையல் கிலுங்கவே (பந்தெடு)
பாடகந்தண்டை சிலம்பு புலம்பிட
பட்டுச்சல்லரிகள் விட்டுக்குலாவிட
ஆடகமாம் மணிப்பந்தெடுத்தாடவே
அம்மானைப்பம்பரம் போட்டுப்பிடித்தவள் (பந்தெடு)
பம்பரமும் பலபந்துமெடுத்தவள்

பாவித்துப்பந்தெடுத்தாடிக்கொண்டாடியே
கெம்பீரமாய் பொன்னுந்தோட்டுக்காரியம்மை
கிட்டிமையாய் நவரெத்தினம்போலவே (பந்தெடு)

## விருத்தம்

எடுத்தனன்பந்துதன்னை இங்கிதத்தோட்டுக்காரி
முடுத்தனமாயெல்லோரும் மேடையில் வந்துகூடி
வடுத்தனமடவார் வந்து வகைவகைபந்தெடுத்து
கொடுத்தனர்தோழிமார்க்கு கும்பிட்டுவாங்கினரே

## நடை

ஆளுக்கொருபந்தெடுத்தார் அம்மனுடதொழியர்கள்
ஆடும்பந்து பம்பரமும் அம்மானைகிலுகிலுக்கை
தோழியரும் தோட்டுக்காரியம்மனும் மனம்மகிழ
தோடெடுத்தபந்தின்பேரைச் சொல்லுகிறேன்கேளுமினி
முத்துப்பந்து நீலப்பந்து மூதண்டஞ்சிறந்தபந்து
மோகமாயெவரும்போற்றும் மூன்றுநிறமானபந்து
பொற்றுகிலாலேபொதிந்த பொங்காரச்சிங்காரப்பந்து
பெட்டகத்துக்குள்ளிருந்த பட்டுநூல்பொதிந்தபந்து
மாதளம்பூவாளிப்பந்து மந்திரலோகத்துப்பந்து
மரகதமான பச்சைவன்னமிட்டச் சின்னபந்து
பூவாளப்பம்பரமோடு பொன்னுற்செய்த அம்மானையும்
பொன்னும் தோட்டுக்காரியம்மை அம்மானைபோட்டுப்பிடிக்க
அடித்தபந்தானதுவும் ஆகாயத்திலேபறக்க
அந்தப்பந்தைச் சந்தோஷமாயவளொருதிபிடிக்க
பிடித்தபந்தையெடுத்துப் பின்னேயொருதியடிக்க
பொன்னுந்தோட்டுக்காரியம்மை வன்னப்பந்துதானடிக்க
அடிக்கவேபார்த்தவளும் அங்கொருதியும்பிடிக்க
அந்தப்பந்துதுள்ளியோடி ஆகாசத்திலேஉயர்ந்து
படிதனிலேவீழும்முன்னே பாங்கியரோடிப்பிடிக்க
பந்தொருதிதான்பிடிக்க வந்தொருதிதான்பறிக்க
பந்தினைஎடுத்தெறிய சந்தமுடன் கூடிநின்ற
பட்டுச்சேலைக்காரியர்கள் கெட்டுமல்லுத்தான்பிடிக்கு
சந்தோஷமாய்த்தோட்டுக்காரி அம்மனுந்தோழியுடனே
தக்கபந்தடிக்கக்கேட்டுத் தான்மடவார்குரவைபாட

## வேறு

தேடிக்குரவைகள் பாடியடிக்க
திந்தோம் திமியெனப் பந்தைப்பிடிக்க
பாடிப்படித்துரை கொண்டாளொருதி
பகுமானமாகச்சிரித்தாளொருத்தி
கோரிமுடித்த முடிகளசைய
கொண்டையில்மாலை குலைந்துவிழவே
மார்பிலே பூசினசந்தனப்பூச்சும்
மஞ்சணையுமது மிஞ்சச்சொரிய
வாசப்புனுகு சவ்வாதுமணக்க

மல்லிகை முல்லை கமகமவென்ன
பூசினமஞ்சணைப் பொட்டும் உருக
பொன்னுந்தோட்டுக்காரியம்மனப்போது
மந்திரமாகவே இந்திரலோகத்தில்
மரகதமாலைகள் சூடிமணக்க
அந்தரி சுந்தரியாடியபந்தே
அரிகிட தரிகிட மென்றாடாய்பந்தே
இந்திரமாகிய சுந்தர நுதலாள்
இளமயிலாள் தோட்டுக்காரியென்னம்மை
சுந்தரமாக நடைகள்துவள
துடியிடை அசையக் கொடிகள்புரள
கைவளையானது கலகலகலென
காப்புடன் வெள்ளிக்கலையுமிலங்க
மையிடுங்கண்ணில் வரிக்குறி கொஞ்ச
மரகத மாமணித்தோடுமிலங்க
ஆடுகொப்பாடவேதோடுமசைய
அழகான பொற்பணி தானுமிலங்க
மூடாவுமேயவள் சூடியபட்டும்
மோகனமாகிய மூக்குத்திமின்ன
மின்னோடு பட்டும் பொன்னோடு மணியும்
மிச்சிதமாகிய உச்சிப்பிறையும்
உன்னிதமாகவே கெட்டி உடுத்த
உருவெழுத்தும் பட்டாடைதுலங்க
பட்டுடனே பணிச்சேலையதுவும்
பாடகந்தண்டை கலீர்கலீரென்ன
கட்டுவம்மயிலடி பீலியுடனே
கலகலவென்னச் சிலம்பும்புலம்ப
மாணிக்கமாலை மரகதமாலை
மல்லிகைப்பூமாலையுங்குடமாலை
ஆணிப்பொன்மாலை முத்தாபரணமும்
அழகான மோகனமாலை பொன்மாலை
மாலையுமுள்க்கெட்டுக் காறைசவடி
மந்திரமாலைப் பதைக்கமிலங்க
ஏலமடவார்களோலமிட்டாட
ஏந்திளையார்கள் பந்தாடியேமீண்டார்

## நடை

பந்தடித்துவிளையாடி பாவைநல்லாள் தோட்டுக்காரி
கொந்தளப்பூமேடையிலே கூடிநிற்கும்வேளையிலே
விளையாடியவர்கள் நிற்கும் வேடிக்கை வித்தாரமதை
குழையாடுங்காதலழகுங் கொடியிடையாள் வடிவழகும்
படையாளும் ராசமன்னன் பர்லன்குமரப்பனவன்
வடிவுடையாளழகுகண்டு மையல்கொண்டுதடுமாறி
கண்ணழகும் முகத்தழகும் காதழகும் மூக்கழகும்
பெண்ணழகி வடிவுகண்டு பேதவித்து மூச்செறிந்து
தையலுடதிருவடிவை தானவனுங்கண்டபோது

மையல்கொண்டு தடுமாறி மதிமயங்கி என்னசொல்வான்
சூழுலகில் கண்டதில்லை துடியிடையாள் தனைப்போலே
வாழும்படி நாமிவளை மாலையிடவேணுமென்று
வன்னமுள்ள படைநெருங்க மந்திரிமார் சூழ்ந்துவர
தன்னுடையகோட்டையிலே சடுதியிலே வந்தனராம்
கோட்டைகடந்துள்ளேசென்று குமரப்பராசமன்னன்
பூட்டும்மணிமேடையிலே புகுந்தவனுஞ் சரிந்துகொண்டான்
காமக்குளிரும்பிடித்து கஞ்சித்தண்ணீர்குடியாமல்
தாமருவும் மெத்தையிலே தலைவலிக்குதென்றுசொல்லி
பட்டாலே மூடிக்கொண்டு பழக்க மொழி பேசாமல்
கட்டாகச் சமைத்துவைத்த கறிசோறுமருந்தாமல்
அன்னந்தண்ணீர் குடியாமல் அமுதேதற்றுங்கூடாமல்
மன்னன் குமரப்பராசன் மனச்சடைவாயிருப்பதெல்லாம்
கொந்தளப்பூராசாவும் கூடி இருந்தோர்களுமாய்
வந்துகண்டார்சடுதியிலே மகனுடையமனச்சடைவை
மாநிலங்குந்திண்புயனே வடிவுடையராசமன்னா
ஏதுமுறையுந்தனுக்கு இச்சடைவு வருவானேன்
ஆனைபரிபட்டதுண்டோ அமைச்சர் பட்டுப்போனதுண்டோ
சேனைபடைத்தலைவர்வந்து சிறந்தகப்பங்கேட்டதுண்டோ
என்னகுறை வந்தாலுமென்னோடே சொல்லுமென்றார்
மன்னவர்கள் தான்கேட்க மறுத்துமொழி ஏதுரைப்பான்
என்னசொல்வேன் நானினித்தானிலங்குமுடிக் காவலவா
மன்னவனே என்னுடைய மனச்சடைவைக் கேளுமென்றார்

## வேறு

ஆண்டவனே என்னுடைய தம்பிரானேயிப்போ
அப்பச்சரே நானுமினிச் செப்பும்மொழிகேளும்
கூண்டமுட்டப் பதிக்கோட்டை சுற்றிப்பார்க்கப்போனேன்
கூடாரப்பல்லாக்கி லேறிக்கொண்டுநானும்
கோட்டை சுற்றிப் பார்த்துக்கொண்டு கூடிநிற்கும்நேரம்
கோனுண்டிராசன்மகள் கோதைதோட்டுக்காரி
வாட்டமற்ற மேடையிலே வந்துபந்தடித்தாள்
வடிவுகண்டு நான்மதி மயங்கிவிட்டேன்மன்னா
கடல்சூழ்ந்த வையகத்தில் தோட்டுக்காரிபோலே
கட்டழகாய் இப்படிப் பெண்கண்டதுவுமில்லை
திடமாகவெந்தனக்கு நீரவளையிப்போ
செப்பமாய் மணம்முடித்துச் செய்து தரவேணும்
அவளுடன் மாலையிட்டுத்தாராதேயிருந்தால்
அம்புவியிலென்னுயிரை வைத்திருப்பதில்லை
காவலவாநீருமிப்போ கண்டிருக்கவேதான்
கையினாலே வாள்நிறுத்திச் சாடியுயிர்மாள்வேன்
உடவாளைத்தானிறுத்தி உயிரைவிடுவேன்நான்
உலகறிய நானுமிப்போ உமக்குமகனல்ல
திடமாகச்சொன்னேன் காணெந்தனப்பச்சரே
தென்குமரியம்மை திருவாணையிதுமெய்யே

குமரப்பராசனவனுரைத்த மொழிகேட்டு
கொந்தளப்பூராசன் மறுவார்த்தை சொல்லுவானும்
மகரக்கொடியையுடைய மன்னவனேயிப்போ
வம்பதிலே நீயிறக்க வேண்டாங்காண்மகனே
ஆண்டபடைவீடதிலே நீயிருக்க உனக்கு
ஆனதோட்டுக்காரியவள் தன்னைமணம்பேசி
வேண்டும்படி நானவளை உனக்குமணம்முடித்து
விரைவுடனே தருவேனிப்போ மெய்யிதுதானென்றார்

## வேறு

அந்தநேரத்தில் கொந்தளப்பூராசன்
ஆன மந்திரிமாரையழைத்துடன்
சிந்தையாகவே எல்லோருங்கூடியே
தேறிப்பார்த்துத் திருநீட்டெழுதினன்
எழுதினன் முழுவாசக நீட்டது
எல்லாமந்திரி மாருமறியவே
பழுதிலாதொரு கோனண்டிராசாவே
பக்ஷமுள்ளவர் நீரெனக்கல்லவோ
அல்லவென்றொரு செய்திசொல்லாமலே
அன்பாயும்மகள் தோட்டுக்காரிதன்னை
நல்லவண்ணம் குமரப்பராசர்க்கு
நல்மணஞ்செய்து தாருமெனச்சொல்லி
உன்னிதமாக நீட்டுமெழுதியே
ஒட்டன்கையினில் நீட்டைக்கொடுத்திட
நன்றியாகவே ஒட்டன்கைவாங்கியே
நாடி முட்டப்பதியினில் வந்தனன்
வந்துஒட்டன் வணங்கிச்சடுதியில்
மன்னன் கோனண்டி ராசனிடத்திலே
சந்தமாகவே நீட்டைக்கொடுத்திட
தானே மந்திரிமார்களும்வாசிக்க
நன்றதாயோலை வாசகத்தைக்கேட்டு
நல்ல கோனண்டிராசனுமப்போது
நன்று நன்றிது நம்முடனேயவன்
நாட்டமாகப் பெண்கேட்டதும்நன்றென
சினத்து வண்டுருக்கிப் பற்கடித்தவன்
சிங்கம்போலவே சிறியோராசனும்
மனதில்வேகம்மிகுதி கொண்டேயவன்
வந்தஒட்டனை ஏசிப்பறைந்தனன்
பறையாத பறை வார்த்தை பேசியே
பயலாரடா பெண்கேட்டு வந்தவன்
முறைமாமன் மகனோ அவனடா
முடுக்கிவெட்டி அவனையுருட்டுவேன்
ஆமடா எனக்கு நிகரோ அவன்
அறியானோ என் கீர்த்தியுஞ் செய்தியும்
போமடாயிலே கோட்டைக்குள் நில்லாதே

பிடித்துக் கட்டி அடித்து விரட்டென்றார்
மறுத்துவார்த்தையிவன் பறைந்ததுண்டால்
வாங்கிநாக்கை வலித்தறுமென்பாராம்
சிரித்து வார்த்தையினிப் பறைந்ததுண்டால்
சிங்காரக் கழுவானதிற் போடென்றான்
பொந்திற் பூனை பதுங்கிக் கிடந்தாப்போல்
புல்லெலிபோற் பதுங்கிக் கிடவாமல்
எந்தனக்குயிவன் சரிதானோடா
எண்ணமலிவன் வந்துபெண்கேட்கவே
இந்தக்காட்டுக்குள்ளே கோட்டை போட்டதால்
எனக்குச் சரியென்றேயிருக்கிறான்
பந்தமாகயிருக்காமலேயவன்
பாடைகள் வந்தால் பொடியாக்கிப்போடென
ஆலம்போலவன் கோபித்துச்சீறியே
அக்கினிபோலிருகண் சிவந்தவன்
ஓலையைச் சீலையைப்போற் கிழித்தவன்
விட்டெறிந்தானே சுட்டுப்போடுமென்ன
கிட்டக்கூப்பிட்டு ரண்டு குட்டுப்போட்டு
கீழ்நாடிப் பல்லுதிர அடித்தவன்
பெட்புடனிங்கே நில்லாதோபோவென
பிடரியைப் பிடித்துத் தள்ளிவிட்டனர்

## வேறு

அந்தநேரத்திலே ஒட்டனவன்றான்
அருமையாய் நாமன் பிழைத்தோமேயென்ன
சந்தோஷமாய் நம்மள் தெய்வச்செயலால்
தலைபிழைத்தோம் காண்வினைகள் வாராமல்
என்று புலம்பிக் கடிதாய் நடந்து
ஏத்ததோர் கொந்தளப்பூராசனோடே
சென்று மொழியது கொஞ்சமுரைத்து
செய்தி சொல்லவாயிற் பல்லதுமில்லை
நன்றாக வென்னை நீரங்கேயனுப்பி
நாயினுங் கேடாயடிபட்டு வந்தேன்
வண்டத்தனத்துக்கு என்னைவிட்டீரே
வாயினிற் பல்லும் பறிகொடுத்தேனே
மாச்சியமு மெந்தன் பூச்சியந்தானும்
வாய் பிளந்து மொழி பேசப்போகாது
காச்சின கூழும் குடிக்கப் போகாது
கன்னத்திற்பட்ட அடிவலுவாலே
உள்ளபடி செய்தி சொல்லணமானால்
ஒருபனை ஓலையுங் காணுதெழுத
எள்ளலாக இவன் சொன்னதைக் கேட்டு
இருந்தவரெல்லாந் தலை கவிழ்ந்தாரே

## விருத்தம்

முகமது கவிழ்ந்து வாடி முடுக்குள்ள ராசன்ருனும்
செகமதி லிந்தச்செய்தி செவிதனில் கேட்பதற்கு
உகமது விடிந்ததிப்போ ஊழ்வினை தானோவென்ன
பகவதி தனையும் போற்றி படையுடன் வாளெடுத்தான்

## வேறு

உடைவாளைமி கவெடுத்து உடனவனும் வண்டுறுக்கி
நடைநகுலன் கொந்தளபூ ராசனவனே து சொல்வான்
நெஞ்சினிலேகப டுவைத்து விலையழியப் பனறச்தானே
எனசோறு உண்டவர்க ளில்லையோடா சேவகரே
வாருமடா சேவகரே வலுபடைநாம் பொருவதற்கு
பாருமடா அவன்மேலே படைபோகச் சீக்கிரத்தில்
ஆனையொடு குதிரைகளை அலங்கரியுஞ் சேவகரே
பூனையல்லோ அவனெனக்குப் புலியோடே எதிர்த்தானே
கல்லணை வைத்தே குதிரை கடிவாளம் போடுமடா
எல்லோரு மொருப்போலே ஏறுமடா இப்போது
குண்டு மருந்து வேடிகள் கூடக்கொண்டு வாருமடா
வண்டியிலே பீரங்கி வைத்தேற்றி இழுவுமடா
சந்திபெட்டி மகனுடைய தலையறுத்து வரவேணும்
கொத்தளப்பூ ராசாவும கோபித்துக்கொண்டேது சொல்வான்
கொல்லம் மட்டும் குமரி மட்டும் கூண்ட முட்டப்பதி வரைக்கும்
எல்லை மட்டு மெனக்கல்லவோ எதிர்ப்பானோ என்றேடே
வெட்டாத படையும் வெட்டி வேண்டாத கப்பம்வாங்கி
ஒட்டனையும் பங்கஞ்செய்த உற்றபுகழ் மன்னனுட
கோட்டைதட்டி தீக்கொழுத்தி கொள்ளையிட்டுததானழித்து
தீட்டுப்புகழ் தேவியரைச் சிறைபிடிக்கவேணுமென்றார்

## வேறு

அந்த வார்த்தை கேட்டபோது குமரப்பராசமன்னன்
ஆர்பாக வந்து அப்பச்சரையடிதொழுது
சந்தமாக ஐயனையும் சாஷ்டாங்கமாய்ப பணிந்து
சட்டெனவே கோட்டைக்குள்ளே தானவனும் நின்று மீண்டு
தொழுது அடிபணிந்து குமரப்ப ராசாவும்
துங்க உடவாளதையும அங்கே சென்றுதான் பறித்து
பழுது வராமலந்த படைகளையும் நிறுத்தி
பாளையத்துக் காரரோடே வேலையிது அல்லவென்ன
அல்லகாணு மென்னுடைய அப்பச்சரே சொல்லக்கேளும்
அடியேன் நானிங்கிருக்க அப்பச்சரே போகணுமோ
சொல்லுகிறேன் செய்தி எல்லாம் எண்ணி எட்டு நாளைக்குள்ளே
சுட்டிப் பெட்டி மகன் றலையை வெட்டுதற்கு நான் பாரேன்கோ
போரு நாம பொருவதெல்லாம பொறுத்துக்கொள் சற்று நேரம்
பெண்ணைக்கொண்டு வாறதுக்கு எண்ணமில்லையோ வெனக்கு
சீருடனே நல்லமணஞ் செய்வதில்லை என்றதுக்கு
சென்றெடுத்துக்கொண்டுவரத் திறமில்லையோ வெனக்கு
கோட்டைக்குள்ளே நீருங்காண குதிரைப்படைகளோடே

கூட்டப்புளிக்காட்டைச் சுற்றி வேட்டையாட ணுமெனக்கு
பாட்டுடனேயப்பச்சரே வேட்டையாடி நானும்வர
பக்கப்படையானதையு மொக்கவே யனுப்புமென்றார்.

## விருத்தம்

வண்டணி மாலைமார்பன் வடிவுள்ளராசன்றானும்
தண்டமிழ்தகப்பனோடே தானிருந்தே தோ சொல்வான்
எண்ணிசை புகழுந் தோட்டுக்காரியை எடுத்து நானும்
கொண்டுதான் வருவேன் நீருங்கோட்டையிலிருவு மென்றான்

## நடை

கோட்டையிலே நீரிருவும் குதிரைப்படை தன்னோடே
வேட்டையது ஆடுதற்கு விரைந்து படைநான் போறேன்
பெண்தா ராதிருந்ததுவும் பேசிமொழி பறைந்ததுவும்
வம்பாக ஒட்டனைத்தான் வம்புபடுத்தி விட்டதற்கும்
குவளைவிழியானவளை கோனாண்டி ராசனுட
மகளை அவனெந்தனுக்கு மாலையிடேனென்றதுக்கும்
சபையறிய மாலையிட்டுத் தாராதே யிருந்ததுக்கும்
அபகீர்த்தியாய் நடத்தி அவனுடைய மகள் தனையும்
மகளான அவனுடைய வலு தோட்டுக்காரி தனனை
புகழாக நானெடுத்துப் புதுமையுடன் வராவிட்டால்
பகரமது எடுத்தவளைப் பரிசுகெடாதேயிருந்தால்
குமரனென்ற பேருமில்லை கொண்டுவராதேயிருந்தால்
என்று சொல்லி ராசனவன் இதளிறுக்கிப்பற்கடித்து
வண்டுதட்டி பற்கடித்து மாருதட்டிப் பாசையிட்டான
பாசையிட்டு வாதுசொல்லிப பாலன்குமரப்பராசன்
வீசும்பெரும் படையோடே வேட்டையாட வேணுமென்றார்

## வேறு

வேட்டைக்குப் போகவென்று நல்ல வீரன்குமரப்பராசவும்
தாட்டித்த சேவகரும்–கூடத்–தங்கச்சிவிகையுங் காலாளும்
காலாட்கள் சூழ்ந்துவர–நல்ல–நல்ல–கம்பமதயானையானதுவும்
சேலாய்ப் பெருமபடையும்–சில–சிங்காரதொட்டியர் சேவகரும்
கூட்டப் பெரும்படையும்–வரிக்–குஞ்சவெண்சாமரையுங் கொடியும்
வேட்டைத் தலைவர்களும–வெகு–நாயும் பாசக்கயிறுங் குறடும்
நாயும்முயலீட்டியுடன்–நல்ல–பன்றிவலையும் வேலும்
பாயும்பலநாயும்–வாளும்–பாரவளையெறியீட்டிகளும்
வாளுமெறிகவணும்–வல்ல–வல்லயக்காரர் பெரும்படையும்
ஆளும்பலசனமும்–மல–ஆனைபரிகளுஞ் சேனைகளும்
சேனைப்படையுடனே–கூடித்–தீரன்குமரப்பராசாவும்
ஆனை தனிலேறிக்–குஞ்சி–ராமச்சிறுக்கனபயமிட
இடப்பக்குடையுடனே–பல்–ஆயுதக்கர்ராணி நெருங்க
தடிப்பாயிருபுறமுர்–வது–தக்கவெள்ளித்தடிக்காரர்களும்
வெள்ளி வெண்சாமரையும்–நல்ல–வெங்கலத் தம்பட்டமும் முழங்க
பள்ளிக்குடை கிழறறு–சிலர்–பக்கத்திற்கட்டியங்கூறிவா

கூறும்புகழ்வளரும்-வலு-கொண்டகுமரப்பராசாவும்
ஏறும்மதகரிக்கு-மணி-யிட்டதோரோசை கிலுகிலென
பாளையக்காரர்களும்-சிலர்-பக்கத்தில் பல்லக்கிலேறிவர
காளம்விருதுகொம்பு-பலர்-கட்டுடன் பட்டுக் கொடிபிடிக்க
விருதுப் படையுடனே-படை-வேட்டைக்குப் போகவேகூட்டிவந்தார்
குதிரைப்படையுடனே-கொலுவான-குமரப்பராசாவும்
சலியாப்படையுடனே-கூடத்-தக்கதோர்மந்திரிமார்கள்வர
வலுவாய்வேட்டையாடக்-கூடி-வருகிறதேபடையானதெல்லாம்

## வேறு

நாடிப்படைக்கூடியொரு கோடிப்படையாகவே
நாட்டத்துடன் வேட்டைக்கது கூட்டப்படைக்காகவே
கூடிப்படைக்குள்ளே விருதாடிக் கொடிமின்னவே
கூண்டதிசை எட்டும் மெய்க்கவே கரிநடக்கவே
அட்டதிசையுமதிரக் கொட்டொலி முழங்கவே
அடிக்குந்திடிமனது ஆரபாரமாகவே
இட்டத்துடனே படைகள் கோட்டையுங்கடக்கவே
எல்லையதுதான்கடந்து ஏவியேபோகலுற்றாரே

## வேறு

பொரவேபெரும்படைகள் சாலைவழியாகவே தான்
புரவிப்பெரும்படைகள் வருகுதே பாருமென்ன
வருகுதே பரியெல்லாம் துரிசமாக நடந்து
வன்னிமரச்சோலைவிட்டு வாச்சாங்குளமுங் கடந்து
கடந்துபெரும்படைகள் கல்லுச்சுக்குபபாறைவிட்டு
கருத்துடனே நாச்சியார் குளமதுவுங் கடந்து
வடக்கே நடந்துபடைவாகையடிக் கோவில்விட்டு
வன்னிமரமுங்கடந்து வக்கிருணிப் பாறைவிட்டு
வாய்ப்புடனே தீப்பாஞ்சி விடுவிச்சிகோவில்விட்டு
வடக்கேவருகுதலோ வாய்த்தசாலை வழியாக
தாப்புடனே குமரப்ப ராசனுட தன்படைகள்
தட்டியேறியே படைகள் வெட்டுக் குதிரையுடனே
கோடிப்படையோடே வலுகுமரப்ப ராசாவும்
குக்குளித்து வாரபடை கொம்பிலே இருந்துகொண்டு
ஓடியே நடந்தபடை ஒத்தப்பனைக் கோட்டைவிட்டு
ஊக்கமுடன் பாற்குளமும் உடனே கடந்துபடை
வீறுடன் படைத்தலைவர் வேடர்படை ஏறுவாரும்
வேட்டைத் தலைவருடனே கூட்டநாயுஞ் சங்கிலியும்
ஏறு திலாவுங் கிணறும் ஈத்தங்காடும் பார்த்துப்பார்த்து
எட்டி யெறிவார் செடியில் கட்டியுங் கல்லுமெடுத்து
குத்துச்செடி வட்டக்காடு குமடுபருவதமும்
கூவென அபயமிட்டுக் குக்குளித்துத்தான் கலைப்பார்
பத்திக்காடு சுற்றி வேட்டை ஆடுவாரா மன்னேரம்
பாம்பணிக் குளத்துவெளி பார்த்து வேட்டையாடிக்கொண்டு
சங்கந்தேரி வட்டக்காடு தானேபெரிய குளமும்

தத்திரமாகப்படைகள் வெற்றியுடனே நடந்து
எங்குஞ்சுற்றி வேட்டையாட எழும்பி முயல்களோட
இட்டத்துடனே நாய்கள் சென்று விரட்டிக்கடிக்க
வெள்ளைமுயல் துள்ளிவிழ வேங்கைநாய் சென்றுகடிக்க
விருது கிரிப்பிள்ளையை விரட்டிச் சிலரடிக்க
பள்ளச்செடிக்குள்ளே சென்று பன்றியைச் சிலபேர் குத்த
பயந்து கலைந்து ஓடி பரிந்து புல்வாய் பிடிக்க
வளையான் குத்தி யெடுப்பார் மானை விரட்டிப்பிடிப்பார்
மண்ணெலியும் வெள்ளெலியும் மாய எலியும் பிடிப்பார்
முளையுஞ்செடி பண்ணையில் நுழையும் விடும்புகளை
முடுகித்தண்டை இழுத்து கடுகச்சிலரிழுக்க
ஓடும் மிளா துள்ளியது உடனே வலையிற்சாட
ஒண்டியிலேகண்டு குத்தி சென்று சிலபேர் பிடிக்க
ஆடுகிடாயானதுவும் ஆனவரையாடுகளும்
அடித்துப்பிடித்துக்காவி எடுத்துச்சிலபேர்வர
ஓடும்புலியா னதையும் ஒருதன் விரட்டிக்குத்த
உத்தகுமரப்ப ராசன் மெத்த வெடுமானஞ் செய்ய
ஆட்டுத்திரளைப்பிடிக்கும் கூட்டநரியைப் பிடித்து
ஆரபார மாகச்சிலர் அபயமிட்டுக் கொணர
காட்டுமிருகம் பிடித்துக் கையதிலே தூக்கிக்கொண்டு
கடந்து பெரும் படைகள் நடந்தனர் தெற்கே நோக்கி

## விருத்தம்

தெற்கதுநோக்கி நல்ல திடமனுமடித்துக்கொண்டு
பக்குவக்குழலாளம்மை பகவதி இருக்கும் நேரே
கக்கிஷமான தோட்டுக்காரியை எடுப்பதற்கு
உக்கிரப்படைகளோடே உடனவர் நடக்கலுற்றார்

## வேறு

நடந்துபெரும்படையதுதான் நாடானேரிகடந்து
துடர்ந்துபடை வருகுதடா தும்பை குளத்தூரும்விட்டு
ஊருமிராதாபுரமும் உடங்காடும் தான்கடந்து
சாரிதமாய்வாறப்படை சரியுதல்லோ நேருதெற்கே
இடத்தே சுற்றிவாறபடை ஏற்றபண்ணையூருமிட்டு
கடத்தலைவாள்காரருடன் கத்திகேடயமெடுத்து
குக்குளித்து வாறபடை கொல்லங்குளத்துவழியே
அக்குளித்து சடுதியிலே அங்குசுற்றி வந்தபடை
வாரணிசேர் மலைமார்பன் வடிவன்குமரப்பராசன்
காரணி கருங்குளமும் கன்னங்குளமானதிலும்
ஆட்டத்துடனே படைகள் ஆயத்துறையுந் தொடுப்பாய்
கூட்டப்புளிதனிலே வந்து கூடிப்படை நிற்குதல்லோ
இப்படியே படைகளது இங்கே நிற்கும் நேரமதில்
கற்புடைய மாதுமின்னுள் கன்னி தோட்டுக்காரியம்மை
கற்மவிதி வாறதையும் காரிகையுமறியாமல்
சொற்பெரிய தோழிமாரை சுனையாட அழைக்கிறாளே

## விருத்தம்

தோழிமார் தமையழைத்து சுனையது ஆடப்போக
மாளிகை தன்னைவிட்டு மங்கையர் வெளியில்வந்து
நீளியஅரைப்பு சீக்காய் நெல்லிக்காய் பருப்போடெண்ணை
நாழிகை தனிலெடுத்து நாயகிமார்கள் வந்தார்

## வேறு

வந்தாரே தோழிமார் சந்தோஷமாக
வல்லிமரகதவல்லிமீனாக்ஷி
சுந்தரமீனாக்ஷி மணிமுத்துமாலை
தோட்டுக்காரிக்கு அடப்பக்காரி தான்
மந்திரமாமணி வீசிச்சுழற்றும்
வட்டக்குடைக்காரி செம்பட்டுக்காரி
செம்பட்டுக்காரி பிடிமொந்தைக்காரி
செண்பகப்பூப்போல சேர்ந்தநிறத்தாள்
மொந்தைக்காரியோடே காளாஞ்சிக்காரி
மோகனமுத்து பிராமணக்கன்னி
பங்காகப் பெண்கள் பதினாறுபேரும்
பன்னீர்க்குடமது கையிலெடுத்து
கண்டாங்கிப்பட்டுடன் மூடாவுஞ்சூடி
கையிலே மஞ்சணைச் செப்பும் சிமிளும்
தண்டையும் பாடகம் சிலம்புங்கிலுங்க
தாயாரைச் சூழ்ந்தவராசாரஞ்செய்ய
மஞ்சணைமிஞ்சக் கழுத்திலே பூசி
வந்துமடவார்கள் சந்தோஷமாக
கொஞ்சிக்குலாவிச் சுனையாடப்போக
கூடிமடவாரொருப்போலவே தான்
பச்சைநிறத்தாள் மணித்தோட்டுக்காரி
பல்லக்கிலே வந்து ஏறும் நேரத்தில்
உச்சத்திலச்சக்கெவுளியுஞ் சொல்ல
ஒருத்தி இடத்தே கருத்தாகத் தும்ம
வச்சிரமாய்த் தோட்டுக்காரியம்மை தான்
வாறவிதியை அவளறியாமல்
கெச்சிதமாகவே தோழிமாரோடே
கீழேயிறங்கி நடந்தவள்வாறாள்

## நடை

வீட்டைவிட்டுத் தான்கடந்து வெளிக்காணுதிருந்தவளும்
கோட்டைவிட்டு சுனை தனிற்போய் குளித்து விளையாடுதற்கு
காயகியாள் தோட்டுக்காரி நாதன் விதிப்படியாலே
பாசையிட்ட ராசமன்னன் பகரஞ்செய்வதறியாமல்
ஆழிவர்னன் திருவருளால் அயன்விதித்தபடியாலே
ஊழிவிதிப்படியிவட்கு உடன் வாறதறியாமல்
சதிகாரன் பெண்கேட்டான் தானுமந்த ராசமன்னன்
விதியாகச் சுனையில்வந்து விளைவதையுமறியாமல்

என்னவரப்போகிறது என்றுசொல்லி மனதிலுன்னி
வன்னமுடன் தோட்டுக்காரி வாய்த்தசுனையாடுதற்கு
ஆடல்வர்னப் பெண்கொடியாள் அழகுதோட்டுக்காரியம்மை
மூடாவும் பல்லக்கிலே முன்னேயவரெழுந்தருளி
பாட்டதுவுந் தான்பாடி பாவையர்களன்னேரம்
வேட்டையாட ராசமன்னன் விரைந்து வந்ததறியாமல்
அறியாமற் பெண்களெல்லாம் அன்பாக ஒருப்போலே
குறியாய்ப் பொன்பணியணிந்து கொண்டையிலே மாலைசுற்றி
மாலைசுற்றி பூச்சூடி மஞ்சணையுந் தான்பூசி
சேலைசுற்றுந் தோட்டுக்காரி சேயிழையாள் தானுமங்கே
முன்சுரைக்குச் சருகை சுற்றும் முக்கியமதானபட்டை
இன்னஞ் சொல்லக்கேளுமென்ன எடுத்துரைப்பானாறுமுகம்

## வேறு

ஆணித்தறியினில் செய்த அஞ்சுமுழப்பஞ்சவர்னம்
ஆதவனுதயம்போல அழகுள்ள வர்ணப்பட்டு
வேணமுத்துக்கறுப்பனுடன் மேகவர்ணப்பட்டதுவும்
வீரவாளி மாந்தளிரன் வெல்லப்பட்டு கொல்லம்பட்டு
மந்திரப்பூவாளியோடே மகிழம்பூவாளிப்பட்டு
மணிப்புடவை பெரிய விலும் பன்சகலாத்து
இந்திரலோகத்திலுள்ள சந்தனவாசத்தின்பட்டு
ஏத்த புன்னைப்பூ நிறத்தன் இலஞ்சிப்பூவின்நிறத்தன்
ஆறுமுழம் நாறுபணம் அருகுமணிப்புடவை
ஆனையடித்தேவாங்கு அடியினில் சங்குவர்னம்
கூறுங்கொக்கு நிறப்பட்டு குங்குமப் பூவர்னப்பட்டு
கொச்சி கோழிக்கோட்டிலுள்ள பச்சை வீரவாளிப்பட்டு
கடுவாய் வரியன் பட்டு காக்கி கறுப்புச்சிவப்பு
கஸ்தூரி நிறப்பட்டுடன் பஞ்சவர்ன வீராவளி
வெள்ளைக்காரன் கப்பலிலே விரைவாகக் கொண்டுவந்த
வெள்ளைப்புள்ளிப்பட்டதுதான் விலை பதினாயிரம் பொன்
உள்ளிச்சரு கொத்தபட்டு ஊரிலழகானபட்டு
ஒன்பதுமுழத்துக்குப்பொன் ஒருபதினாயிரந்தான்
தூத்துக்குடி மேத்தன் நெய்தறுத்த பட்டதானதுக்கு
தேசம் பெரிய குளத்தில் பாதிப்புரவுகொடுத்தார்
ஆத்தூருக்கோலியன் நெய்த அரியபட்டானதுக்கு
ஆயிரம் பொன்னோடு ஒரு ஆனைக்குட்டியுங் கொடுத்தார்
கும்பத்தூருதன்னிலுள்ள செம்பருத்தி பட்டதுக்கு
குறுணிப்பணமு மொரு குதிரையுந்தான் கொடுத்தார்
வம்பனும் வடக்கு நாட்டுச்சாலியன் நெய்தபட்டுக்கு
மதுரைப்புதுப்பணத்தை வாரியங்கேதான் கொடுத்தார்
கொடுத்தாரே பொன்பணத்தைக் கோணண்டிராசாவும்
கொஞ்சங் குறைவுண்டாற் சொல்லுமிஞ்சயின்னமுண்டுபட்டு
வடுவில்லாத் தோட்டுக்காரி வளிதைக் குடுக்கும் பட்டு
வங்காரப் பட்டுவர்னங்கள் சிங்காரமாயின்னங்கேளு
இன்னமின்னஞ் சொல்லக்கேளுமவன்னமுள்ள பட்டின்பேரை

இந்திரலோகத்திலுள்ள மந்திரப்பூ வாளிப்பட்டு
பெண்ணரசி தோட்டுக்காரி யம்மனுக்குடுப்பதற்கு
போதுமோ போதாதோ இங்கு புலவன் படித்ததெல்லாம்
மூட்டை நிற நூல் நூற்று முழுதுமே நெய்தபட்டு
முன் சிறைக்குப் போனதொரு மூசுட்டைப்பூ நிறத்தானும்
வாட்டமற்ற தோட்டுக்காரியம்மனுட தோழிமார்கள்
மகிழ்ந்துசிரித்து தோட்டுக்காரியம்மனோடே சொல்வாள்
இந்தக்கதை சந்தோஷமாம் ஏடெழுதித்தான்கொடுத்த
ஏறும்புகழாறு முகமேற்ற விற்புலவனுக்கு
என்ன வெகுமானமது வர்னவரிசைகொடுத்தார்
கன்னல் சொன்னதும் வளரும் கன்னங்குளத்தூர் வாழும்
காளி புத்திரரெனவே கற்றவர்க்கு மூத்த வள்ளல்
வாளில் வலங்கைத் தலைவன் வாய்த்த ரெட்டைச்சங்குடனே
வையம் மெய்க்க ஈழவனை வாய்த்த சிறைகொண்ட வள்ளல்
சோழனுடனே எதிர்த்துக் கூடைதோடோமென்றவன்காண்
துங்கப்பரி வீரன் வள்ளல் துரைசிங்கனென தீரன்
வள்ளலெனவந்துதித்த யிருளனதிபதிக்கு
மைந்தனென வந்துதித்த மக்கள் நாலு பேரும் வாழ்க
உள்ளபடியாமெனவே கள்ளமில்லாப்பெண்கொடியும்
உடனே பட்டுமெடுத்து திடமாய்த் தோழிமாரோடே
நடந்து சடுதியிலே நல்லதோழிமாருடனே
நாட்டுக்கல்விளையுமிட்டு நடுக்காட்டுப் பாதைவிட்டு
மடந்தை கிளிமொழியாள் வன்னிமரமுங்கடந்து
மார்க்கமுடன் சாலைவழி பொழிக்கரையுங்கடந்து
அந்தமுடனே யவளுஞ் செந்தாழைப்பூ ஓடைவிட்டு
அடைவாய் பலித்தது காண்பாவஞ்சற்றிருக்குதுகாண்
செந்தாழைப்பூ ஓடைவிட்டு திரவியப்பாறைவிட்டு
தேன்மொழியாள் தோட்டுக்காரி சிறந்த பூஞ்சுனையில் வந்தாள்

## விருத்தம்

வந்தாள் சுனையில் நீராட மடவாள் தோட்டுக்காரியம்மை
முந்தமுடியிலெண்ணெயிட்டு முழுதுந்தோய்த்து அரைப்புமிட்டு
சந்தமுடனே சிக்கிறக்கி தடமாய்ச் சுனையில் மடவார்கள்
அந்தமுடனேகுக் குளித்து அழகு சுனையில் வந்தாரே

## நடை

ஏழுபடித்துறையதிலே இறங்கிச் சுனையாடுவதை
கோளனொருபாவி கண்டு குமரப்ப ராசற்குரைத் தான்
சிரிலங்கும்மலை மார்பா சிறந்த புகழ் ராசமன்னா
வாருமையா சுனை தனிலே வந்தாள தோட்டுக்காரி என்றான்
என்ற மொழிதனைக்கேட்டு இலங்கு குமரப்பராசன்
நன்றாச்சு நாமள்வந்த நல்வேட்டைவாய்த்ததென்று
நாடிமனம்மிகமகிழ்ந்து நவிலுவாராமொருவார்த்தை
தேடிவந்த வேட்டையது சிறப்பாகப் பலித்துதினி
பலிப்பாச்சு நன்றாக பாவஞ்சற்றே யிருக்குதுகாண்

சலிப்பாக இருப்பதென்ன தலையில்விதி முடிந்ததுண்டால்
ஆனாலும் நாமளினி அஞ்சிச் செய்ய வேணுமென்ன
தேனுரை நாமெடுத்துச் சேர்த்துக் கொடுபோறதற்கு
எண்ணமெலெடுத்ததுண்டா லிதுபாவமாகுமல்லோ
பெண்ணை எடுப்பதற்கு பின்னுமொரு யோசனை தான்
வள்ளலெனும் மகராசன் வாய்த்த குமரப்பராசன்
வெள்ளிமொந்தை தனையெடுத்து மிகவோட்டன் கைக்கொடுத்து
பெண்பழிதான் நம்மைவிட்டுப்போகாதே தலைமுறைக்கும்
என்னவெண்ணி குமரப்பனும் ஏதுரைப்பானன்னேரம்
ஆனாலுமொருவார்த்தை அருளுகிறேன் நீகேளு
மானூர்தன் வாயாலே வம்புசொல்வாளாமாகில்
தேனுரைச் சென்றெடுத்து சீக்கிரத்தில் கொடுபோகலாம்
தோட்டுக்காரியானவள் தான் தூஷணங்கள் சொல்லுவதை
கேட்டுவரச்சொல்லிவிட்டார் குஞ்சிராமச்சிறுக்கனைத்தான்
வேட்டையாடி நாவுலர்ந்து வெள்ளந்தவிக்குதெனக்கு
தோட்டுக்காரி தான்குளிக்கும சுனையதிலே இப்போசென்று
அஞ்சாமல் நீயுஞ்சென்று அவள் குளிக்குஞ் சுனையதிலே
குஞ்சிராமா இப்போவெள்ளங் கோரிக்கொண்டு வாருமென்ன
நீண்ட குமரப்பராசா நிலைமையுடனேயுரைக்க
ஆண்டவன் சொல்தட்டாமல் ஆமெனவே ஓடலுற்றான்
ஓடியவன் சுனை தனிலே உட்புகுந்து முன்னே செல்ல
நாடிய தோட்டுக்காரி நவிலுவாளாமொரு வார்த்தை
ஆரடா நீசிறுக்கா அஞ்சாமலிங்குவந்தாய்
தூரநில்லு தூரநில்லு சுனையில்வந்து முடுகாதே
பெண்ணரசி சுனையாடும் பூந்தோட்டக்கரைதனிலே
எண்ணாமல்வருவாயோ என்னைச் சற்றுங் கெணியாமல்
பாருக்குள்ளே முடிசூடிப் பலபேர்களிருப்பதுண்டோ
ஆருக்கடா நீர்கோர அஞ்சாமல் வந்தாயென்ன
விமரிசையாய் ஓட்டனவன் விளம்புவானும் பெண்ணவட்கு
அமரில் வெட்டித்தான் துரத்தும் அழகு முடிக்காவலவள்
குமரப்பராசனுக்கு வெள்ளங்கொள்ள வந்தேனென்ன
குமரப்பராசனென்றால் கொம்புரண்டு உண்டுமோடா
துங்கமத யானைக்கல்லோ துலங்குங் கொம்பு முளைத்திருக்கும்
உங்களுட ராசனுக்கு உச்சியிலே கொம்பு முண்டோ
முடுகி வந்த சிறுக்கனைத்தான் முகனையுள்ள தோழியரே
அடியுங்கடி சென்னியிலே அப்பாலே வெருட்டுங்கடி
கல்லெடுத்து எறியுங்கடி காலதனை முறியுங்கடி
பல்லுதனைப் பறியுங்கடி பாவிவிட்டசிறுக்கனுட
வெள்ளிமொந்தையானதையும் வெருட்டிப்பறித்துடையுங்கடி
கள்ளமில்லை என்றிடவே காரிகைமார் வெருட்டுவாராம்
அன்றவர்கள் வெருட்டிடவே ஆனகுஞ்சிச்சிறுக்கனவன்
சென்று சொன்னான் சடுதியிலே செய்திகளும் கீர்த்திகளும்
வம்பான வார்த்தை பல வடிவுடனே சொன்னானென்
தம்பிராசனே என்றபோது தாராசன் குமரப்பனும்
வண்டுறுக்கிப் பற்கடித்து வாறதெல்லாம் வரட்டெனவே

பெண்டுகள் தானென்னையிந்த பிழைவார்த்தை பறைந்ததற்கு
எண்டிசையோர் தான்காண இவள்தனையும் வலுவாக
கொண்டு வரவேணும் படை கூட்டிக்கொண்டு வாருமென்றான்.

## வேறு

வாருமெந்தன் சேவகரே வளையுஞ்சுனைக்கரையை
வாறது வரட்டுமவள் வீறறிய வேணுமென்று
ஆரபாரமாகவேதான் குமரப்பராசமன்னன்
ஆனையிலே ஏறிக்கொண்டு ஆலவட்டம் வீசிவர
அடர்ந்து படைநெருங்க பரந்து குடைநிகழ்த்த
அட்டதிசை எங்கும் படை மட்டிலக்கில்லாமல் வர
மடந்தைக் கிளிமொழியாள் மாது தோட்டுக்காரி தன்னை
வந்தெடுத்துக்கொண்டு வரச்சந்தோஷப்பட்டேயவரும்
கொடியும் விருதும்பல படையுஞ் செருமிவர
குமரப்பராசனவன் கூண்டபடையோடே வந்து
மடியாமல் பூஞ்சுனையை வந்தவர் வளைந்துகொள்ள
வந்திடும் படையைத் தோட்டுக்காரியுங் கண்டாளுடனே

## நடை

கண்டுமனம் மிகப்பதறி காரிகையாளேதோ சொல்வாள்
இன்றுநமக்கூழிவிதி எல்லைமுடிவாச்சுதென்று
வாடி மெத்தமனம் பதறிமதி மயங்கித்தள்ளாடி
கோடிமன மறச்சலித்து கொம்பனையாள் தோட்டுக்காரி
மதிசூடு மீசுரரே மங்கையுமை பங்காளா
விதியோ நான் சுனையாட வீணி லா வந்தேன்சிவனே
சதிரமுடன் சுனையாடத் தலத்தைவிட்டுவரும் போது
எதிரே நான் கண்ட தடை எண்ணிச்சற்றும் பார்த்திலேயே
வன்மம உண்டு இவர்தனக்கு வம்புசெய்தாரிவரெனவே
பொன்வண்டு போலிரைந்தாளே பூஞ்சுனைக்குள் நின்றுகொண்டு
சேலை சுற்றும் பூங்குழலாள் துடியிடையாள் தோட்டுக்காரி
மாலைப்பூப் போலேவாடி மனஞ்சடைத்துத் தள்ளாடி
கோடிமுகம் வாடியந்த கொம்பனை தோட்டுக்காரி
வாடியவள் நிற்கையிலே வந்த குமரப்பராசா
அடுக்கி முடுகி வரவே அரசனைக்கண்டேது சொல்வாள்
துடியுடைய காவலனே சுனையில்வந்து முடுகாதே
முடுகி எந்தனிடத்தில் வந்தால மோசமுண்டு காணுமக்கு
கடுகவினை சூழ்ந்திடுங்காண காரியமுந் தவறுகும
தவறுவரு மென்றலே தலையிளகுங் கண்டீரே
விதறுபடையோடே வந்து வினை விளைக்கவேண்டாங்காண்
வேண்டாங் காணென்னை வந்து வீறுசெய்வீராமாகில்
ஆண்டவனே இன்றுமக்கு அனர்த்தம வருங்கண்டீரே
அனர்த்தம வந்துவிடிந்தாலும ஆனைத் திரள்மடிந்தாலும்
புனத்திலிளங்கிளியாளே போகவிடேனுன்னையுந்தான்
விடுவதில்லை என்றெனை நீர் வீண்மதங்கள் செய்ததுண்டால்
படுவதுதான் நிச்சயமே பழுதிலுயிரிறப்பீரே

உயிரிழந்து படையிழந்து உலகிழந்து போனாலும்
வயிரமுடனுனை நானும் மாலையிடாதே விடேன்நான்
மாலையிட உம்முடைய மாமன் மகள் குமரிருக்கில்
சாலமொழி என்னோடே தான்பறைந்தால் மோசம் வரும்
மோசம் வருமென்றுசொல்லி மொழிக்கு மொழி நீபறைந்தாய்
ஞாயமில்லை இதுவுமக்கு நம்மைப் பயங்காட்டாதே
வீட்டெலிக்குக் காட்டிலுள்ள விருதது தான் பயந்திடுமோ
ஆட்டுக்குட்டிக்கோனாய் தான் அஞ்சுமோ காணாரணங்கே
அஞ்சாமல் முடிசூடி அரசாள மாட்டாமல்
கொஞ்சப் புத்தியாலேவந்து கொலைப்படவுந் தொடுத்தீரோ
தொடுத்தமலர் முடியாமல் தோற்றுவிட்டுப்போவேனோ
எடுத்தமலர் முகராமல் எடுத்தெறிந்து போவேனோ
தன்பூவைத் தானெடுத்து தானமுகந்தால மணங்காண்
வன்பூவைத் தான்மணந்தால் வண்டிருந்து கொட்டிவிடும்
வண்டுமணமுண்டிருந்தால் வருவேனோ நான்விரும்பி
கண்டிருந்து மெச்சிதனை கவிழ்ந்திருந்துந் தின்பாரோ
சொல்லும் மொழிக்கெல்லாம்நீர் சொல்லுவீர்காணுத்தரங்கள்
நல்லவண்ணம் புத்தியொன்று நான்சொல்லவே கேளுமென்றான்
பண்டுமுன்னுள் பெரியோர்கள் பட்டபாடுதனைக்கேளும்
கொண்டமையலால் பிறந்து கொடுமையுடனேயிறந்தார்
இறந்தவர்கள் புதுமைதனை இயம்புகிறேன் கேளுமையா
இறந்தார்கள் பெண்ணாலே ஏகிச்சில பெரியோர்கள்
பெண்ணாலேயிறந்தவர்கள் பேருரைக்கவே இனிதாய்
மண்ணாளுங்காவலனே வளமைசொல்லக்கேளுமையா
வாழும்வள்ளி யூரதிலே மகுடமுடிப் பாண்டியர்கள்
ஆளும்படையோடிருந்து அரசாளுமன்னுளில்
வன்னமுள்ளவடிவழகன வாய்த்த குலசேகரன்றான்
கன்னடியன்மகளாலே கனத்தபடையோடிறந்தான்
சீதையொரு பெண்பிறந்து தெனனிலங்கையழிந்ததுகாண்
மாதவியாளேதுவினால் மடிந்துவிட்டான் கோவிலவன்
மனனன்மகள் கண்ணகியால் மதுரைநகரழிந்ததுகாண்
எண்ணரிய நூற்றுவரும் இறந்தாரே துரௌபதையால்
அகலிகையாலிந்திரற்கு ஆச்சுதல்லோ ஆயிரங்கண்
சகலகலை பிரமனொரு தலையிழந்தான் பார்பதியால்
பண்டுவொருநீலியினால் பழகைநகரழிந்ததுகாண்
கண்டிருந்துமறியாமல் கயமதிலே சாடவந்தீர்
அப்படிப்போலென்னாலே அரசமன்னுமடியாதே
செப்பினசொல் கேளுமையா திரும்பியேபோம் கோட்டையிலே
கோட்டையிலே உன்னையும்நான் கூடக்கொண்டுபோகாமல்
வேட்டையுன்னையாடவந்து விட்டுவிட்டுப் போவேனோ
மையாடுங்கண்ணழகி வலுதோட்டுக்காரிதன்னை
கையாலேநாமள் தொட்டால் கற்பழியுமென்றுசொல்லி
ஆனைதன்னை பாசைசொல்லி அவளுடைய முன்பில்விட்டான்
மானனையமின்னாளை மதயானை தூக்கியதே
அத்தனருளாளிவளை ஆனைசென்று தானெடுத்து
மத்தகத்தில்வைத்திடவே மடவார்கள் குரவையிட

வம்புசொன்னமாதுமின்னாள் வலுதோட்டுக்காரிதன்னை
கம்பமதயானையது கண்டெடுத்துச்சடுதியிலே
எடுத்துமத்தகத்தில்வைத்து இலங்குபட்டால் மூடிக்கொண்டு
தொடுத்துப்படைசூழ்ந்துவர தோட்டுக்காரிதந்தனையும்
வெற்றியுடன் குரவையிட்டு வெள்ளிவெண்சாமரைவீச
கத்தியுடன் கேடையக்கார் கனத்தபடையோடேவர
சடுதியிலே தானடந்து தட்டாரிறப்பதிலே
மடியாமல் சிறையுங்கொண்டு வந்தாரே கோட்டையிலே

## விருத்தம்

வேட்டையுமாடி மன்னன் வீரியமாகவேதான்
கோட்டைக்குள் பெண்ணுங்கொண்டு குமரப்பராசன்றானும்
நாட்டியபடைகளோடே நாழிகைதனிலேவந்து
பூட்டதுதிறந்துமாடப் புரைக்குள்ளேயிருத்துமென்றார்

## நடை

இருத்துமென்னவேயுரைக்க ஏழுகதவுந்திறந்து
உருக்கமுள்ள தோழியுடன் உற்ற தோட்டுக்காரியையும்
வாழுங்குமரப்பராசன் வாய்த்ததட்டாரிறப்பதிலே
ஏழறைக்குள்ளொழித்துவைத்து இருத்தி நல்ல தாள்ப்பூட்டி
மண்டபத்துக்குள்ளிருத்தி வலுகாவல் சூழவைத்து
கொந்தளப்பூராசாவும் குமரப்பராசாவும்
அட்டதிசைதான் மகிழ ஆனகுமரபபராசன்
இட்டபாசையும்நடத்தி இங்குவெகு சந்தோஷமாய்
வந்தான்காணெந்தன்மகன் வசைகாத்தானென்றுசொல்லி
சந்தோஷமாய் மகன்தனக்குதான் வரிசையுங்கொடுத்து
கொலுவாகப் பெரும்படைக்கு கொடுத்தரிசிப்படிகொடுத்து
வலுவாகக் கோட்டையிலே வரும்படை என்றிருந்தனரே

## துடுக்கு

அட்டிசெய்தே தோட்டுக்காரியைக் கொண்டு
அடைத்த குமரப்பராசனுஞ் சொல்வான்
கெட்டியாய்க் கோனண்டிராசனிச்செய்தி
கேட்டால்த் தரியாமலிப்போவருவான்
வருவான் படைகொண்டு கோனண்டிராசன்
வசமாயிருந்திடவேண்டும் நாமென்ன
ஒருப்போலே கோட்டைதனிற்படைவைத்து
உறப்புடன் பாளையந்தானுமிறக்கி
பாளையப்பட்டுடனே கும்பினியும்
பாரவெடியுங் குழலும் பதித்து
சாலக்கோட்டைவழியாகப் படைகள்
தரிக்கயிடம் பார்த்திருக்கணமிப்போ
வேணும்படையிது காணுதுவென்ன
மேற்படைக்கோலையும் விட்டழைத்தாரே
கோனுமற் கொல்லத்திலுள்ளபடையும்

கொடுவர் வடுவர்கள் தொட்டியருக்கும்
வன்னியர் கொத்தங்குளத்திள்ளோர்க்கும்
வடகரை நாட்டில் மறவர் படைக்கும்
தன்னிற் பெரிய உடையார் தலைவன்
தனக்கும் ஊற்றுமலை வன்னியருக்கும்
கம்பளத் தொட்டியர்க்கோலையெழுதி
கருநாகப் பள்ளிப்படையும் வருத்தி
சம்பளச்சேவகர் போதுமோ வென்று
தஞ்சாவூர் வாழ் முகிலனையும் வருத்தி
லக்ஷம் கொம்பாஞ்சி பிராஞ்சி வெள்ளைக்காரர்
ஏத்த உதவிப்படைக்காக வந்தார்
அப்படியே படை சேறிட்டிருக்க
அறிந்தானே கோனுண்டி ராசனுமப்போ

## வேறு

சுனையாடப் போனதுவும் சூழ்ந்தெடுத்துப் போகவென்ன
சுற்றிலுள்ளோர றியாமல் சூக்ஷிசெய் தனுாயமதும்
எணக்கெணியா மலெந்தன் இனியமக ளைக்கொண்ட
ஏந்தலுடனே பொரவே இப்போ படைவாருமென்ருன்
வாருமென்று தன்படையை வருத்திச் சடுதியிலே
வங்காளர் சிங்க ளருடன் வடுவர் தெலுங்கர்களும்
சேரவே பரிகரியும் திரளாகச் சேகரித்து
திக்கெட்டுங்குடை நிகழ்த்த திடிமனடிபடவே
பாரக்கரிபரியுடன் பதினெட்டுப் பாளையமும்
பாயும் புலிபோற் படைகள் பரந்து வருகுதல்லோ
வாரமுள்ள ராகுத்தன்மார் வன்னப்பரியேறிவர
வைத்த வெடியானதுவும் வானயிடிபோல் முழங்க
கடந்து சடுதியிலே முட்டப்பதி நாடுவிட்டு
கட்டுடன் வந்து வளைந்தார் தட்டாரிறப்பானதையும்
படர்ந்து நிரந்துதல்லோபட்டணத்தா ரோடைமட்டும்
பாலாலோடை தனனில்வந்து காலாளும் வளைந்துதல்லோ
வளைந்த படையைக்கண்டு வலு பீரங்கியைத் தீர்த்தார்
மண்டையிலே குண்டுபட்டு மடிந்துதே சேனைபடை
இளந்துபோரவொண்ணுது எல்லோருமொருப்போலேதான்
ஏறிப்படைவெட்டு மென்ன எதிர்த்துப்பொருகுதல்லோ
கொந்தளப்பூ ராசனுடன் கோனுண்டிராசாவும்
குதிரைமேலேறிக்கொண்டு குக்குளித்து வெட்டுவாராம்
இந்தா பாருபாரெனவே எதிர்த்துச்சிலபேர் வெட்ட
இருதோளுக் தாளுமற்று ரணகளத்தில் மடிய
பட்டணத்து ராசன் பட்டான் பச்சமுத்து ராசன் பட்டான்
பக்கத்துணை ஊத்துமலை வன்னியருங்கூடப் பட்டார்
மட்டில்லாப் படையுடனே மடிந்தது கோட்டையிலே
மலைநாட்டு வன்னியரும் மறவர் குறவர்பட
கொந்தளப்பூ ராசன்சென்று கோனுண்டி ராசனைவெட்ட
குத்து வெட்டுப்பட்டு சில கூண்டபடை தானிறக்க
கம்பளத்தொட்டியருடன் கடுகராகுத்தனுடன்

கண்டுபயந்தோடுவொனும் கொந்தளப்பூ ராசனவன்
ஓடிப்போற வேளையிலே ஒருதன வெடியால்சுட
உருண்டை பட்டு அரசன உடன் செத்தான் கோட்டையிலே
மாடமாயிருந்ததெல்லாம் மாண்டார் தோட்டுக்காரியாலே
மன்னன் குமரப்பன் மட்டும் வடுப்படாமல் நின்றானே

## துடுக்கு

அவருட படையு மிவருட படையும்
அணியாய் நெருங்கிப் பொருதவர்பட்டார்
சமரில் முடுகிப் பொருதவா பட்டு
சாடியே உதிரம் ஆறுயோட
ஓடியே உதிர மாறுயோட
உடனே காகம் கழுகும் குடிக்க
கூடியே கூளி கணங்களுஞ்சேர
கோட்டையும் முட்டப்பதியுமழிய
பட்டணமாகிய முட்டப்பதியின
பழுதிலாக் கோட்டை யழிந்ததுபாராய்
கட்டாய் மண்டப மேடைகளெல்லாம்
கடல் வந்துள்ளே சேர்ந்ததுபாராய்
கோட்டையும் மண்டபமே டைகளெல்லாம்
குரை கடல் வந்து வளைந்தது பாராய்
சூட்டிய விதியால் கோட்டையழிந்து
சுழிகடல் வந்து வளைந்தது பாராய்

## நடை

வளைந்து கடலுள்ளாக மண்மாரியும் பொழிய
பொழிந்துதே மண்மாரியது புகழும் முட்டப்பதியழிய
படைவீடு அழிந்ததுவும் பாளையம்பட்டழிந்ததுவும்
சடைவாகத் தாய் தகப்பன் தனலே மாண்டதுவும்
மாண்டிறந்து போனதுவும் மண்டலத்து ராசாக்கள்
ஆண்டிருந்த கோட்டையது அழிந்து மிகப்போனதுவும்
எல்லாருந்தான் கூடி இறந்துவிட்ட செய்தியெல்லாம்
அல்லாருங்குழல் மடவாள் அறிந்தாளே தோட்டுக்காரி
அறிந்து தலையிலடித்து அபயமிட்டுத்தானழுதாள்
முறிந்த மரம்போல் விழுந்து முடி நிலத்தில் விழுந்து
புரண்டு புரண்டேயழுதாள் பொன்னுந்தோட்டுக்காரியம்மை
திரண்டபடை நம்மாலே சேனை எல்லாமிறந்ததுவே
கனிவாயின் மொழியழகி கன்னி தோட்டுக்காரியம்மை
இனியிருந்தாலாகாது இறக்கவுந்தான் வேணுமென்ன
கோக்கதவேழுந்திறந்து குரவையிட்டு மடமடென
ஆக்கமுடன நடந்தோடி அலைவாய்க்கரை தன்னில் வந்தாள்
அலைவாய்க்கரையானதிலே அழகு தோட்டுக்காரியம்மை
சிலைபோலே வடிவழகி தீப்பாய வேணுமென்ன
தீப்பாயவே நமக்குத் திருவேள்வியருளுமென்ன
வாய்ப்பாக வாய்புலம்பி மகாதேவர் தனைத் தொழுதாள்

தெள்ளிய சொல் மொழியழகி சிறந்த நல்ல தோட்டுக்காரி
வெள்ளியாம் பாறைதனிலே வீறுடனே தானிருந்து
இருந்து சிவனை நோக்கி இலங்குந் தோட்டுக்காரியமமை
வருந்தித் தொழுதாள் சிவனை வரடபேறு தாருமென்ன
தாருமெனக் கொருவேள் விசங்கரரே தாருமென்றாள்
பாருமெந்தன் முகம்நோக்கி பார்வதியே பகவதியே
பகவதியே ஈஸ்வரியே படைத்த பரமசிவனே
செகமதிலே மகாதேவா திருவேள்வி தாருமென்ன
தென்சு சிந்தைநாதரையும் திருவனந்தபெருமாளையும்
தஞ்சமெனவே தொழுதாள் தாருந்திருவேள்வி என்றாள்
பட்டர் புரத்தகத்தியரும் பரமசிவனுமிரங்க
கட்டுடனே தோட்டுக்காரி கருணையுடன் நின்றிடத்தில்
எட்டு முக்கு வேள்வியது இவளிருந்தபாறையிலே
வட்டமாகக்குழியுதல்லோ மகதேவர் திருவருளால்
திருவருளால் திருவேள்வி தீக்குழிவந்து தித்திடுமாம்
பரிவான திருவேள்வி பரமசிவனார் கொடுத்தார்
கொடுத்தாரே திருவிறகு கொத்தலரி மாலைகளும்
வடித்த நல்ல சந்தனமும் வாடைபுனுகானதுவும்
இருபத்தொரு குலப்பூவும் ஏழுகுலத்து விறகும்
வருகுதடா அவள் தனக்கு மாயத்திருவேள்வியிலே
மந்திரலோகத்துப்பட்டு மாயத்திரையாய்வளர
இந்திரலோகத்திலுள்ள எண்ணை மஞ்சணையுடனே
வளருந்திருவேள்வியிலே வாடைப்பொடி மஞ்சளதும்
எலுமிச்சம் பழமுடனே ஏத்த தூபதீபங்களும்
இத்தனையுங் கொடுத்த சிவன் எரிகொடுத்தாரில்லையென்ன
மெய்ப்பாகத் தோட்டுக்காரி மேலவனியடிதொழுது
கற்புநெறியுண்டாகில் காணுமெனவே கவிழ்ந்து
குப்பெனவே ஊதிடவே கொடியதீபபிடித்து தல்லோ
தீப்பிடித்துவேள்வியிலே திருவிறகு தனிலேபற்றி
நேர்த்தியுடனெரிந்திடவே நேரிழையாள் தோட்டுக்காரி
மகதேவா துணையெனவே வலமாகச்சுற்றிவந்து
புகழ்தருவாய் பகவதியே—பொன்னே என்கண்மணியே
எக்காலமுஞ் சிவனே எனக்கு வரந்தாருமென
முக்காலுஞ் சுற்றிவந்து மொய்குழலாள் நிற்கும்நேரம்
கொந்தளப்பூ ராசனுட குமரன் குமரப்பராசன்
சந்தோஷமாயவனும சதிருடனே படைசெயித்து
கதிப்பாகப் படையும்வெட்டி கையிலுடைவாள் நிறுத்தி
எதிர்ப்பவர்கள் நமக்கினிமேல் இல்லையென மனதிலுற்று
வாலைக்கிளிமொழியாளை மாலையிடலாமெனவே
மாலையிடலாமெனவே வடிவன் குமரப்பராசன்
பூட்டிவைத்தமண்டபத்தை போய்ப் பார்த்தான் சடுதியிலே
கூட்டுக்கிளிபோலிருந்த கொடியிடையைக் கண்டுதில்லை
கண்டுதில்லை என்சிவனே கனபாவ மேற்றேனே
என்றுசொல்லி ஓடிவந்து இருந்திடத்தை பார்த்தபோது

கதவேழுந்திறந்துநிற்கக் காரிகையைக் கண்டுதில்லை
இது விதியோவென் சிவனே எனவிழுந்தான் தரைதனிலே
தரைதனிலேவிழுந்தெழுந்து தலைதனிலே அடித்தழுது
வரையைஒத்ததிண்புயத்தான் வடிவன் குமரப்பராசன்
சோலைக்கிளிமொழியழகி தோட்டுக்காரிதனைநாமள்
மாலையிட்டுப் பார்த்திலமே வாய்மொழிதான் கேட்டிலனே
சேலுடனேயவளுமிப்போ தீமெழுகியிறந்தாளே
சாலமுடன் நாமிருந்தால் தாரணியோரேசுவரே
ஏசுவரேநமமனைத்தான் இனியிருந்தாற் பயனுமில்லை
வீசுபுகழ்மலைமார்பன் வீரன்குமரப்பராசன்
முட்டப்பதிநாட்டையவன் முழித்தவனும் பார்த்திடவே
பெட்டெனவே புகையைக் கண்டு புகழும் வெளளிப் பாறையிலே
பாறையிலே இறந்தாளென்று பரபரெனவழிநடந்து
வாறான்காண் சடுதியிலே வாய்த்தவெள்ளிப் பாறைநோக்கி
வண்டனவன் வருமவேகம் வாய்ப்புடனே பார்த்துநின்று
கண்டபோது தோட்டுக்காரி காரிகையுமன்னேரம
தாய்தகப்பர்தானிறந்தார் சண்டாளப் பாவியாலே
பாவியிவன் வந்ததுண்டால் பாராமற சிறைபிடிப்பான்
என்னநினைந்தேயவளும் ஈஸ்பரனுரை வணங்கி
என்னைக்கெடுத்தோன வாறானிடது பக்கமொருவேள்வி
தரவேணுமெனக்கேட்க தற்பரனுர் மனதிரங்கி
உரமுடனே வேள்வியது உடனீயத் தோட்டுக்காரி
முக்கியமாய் நின்றவளும் மொகுமொகெனக்குரவையிட்டு
தக்கதொருவேள்வியிலே சாடிவிட்டாளன்நேரம்
சாடுகின்றநேரத்திலே தானவனும் முடுகிவிட்டான்
மூடுமுன்னே ஓடிவந்த முடுக்கன குமரபபராசன்
பாவிஇனியிருப்பதில்லை பார்தனிலே என்னவெண்ணி
ஆவிபெரிதில்லையென்ன அக்கினியில் சாடிவிட்டான்
சாடிவிட்டான்வேள்வியிலே தானும்வரமெனக்கெனவே
கூடநின்ற குடைக்காரன் குஞ்சிராமச்சிறுக்கனவன்
மனனவனைக்காணமல் மதிமயங்கித் தள்ளாடி
தென்னவனைக்காணமல் திகைத்தவனுமழுதழுது
கள்ளமில்லா ஓட்டனவன காலவிரைவதாய நடந்து
வெள்ளிப்பாறைவேள்விவரை வேந்தனுடதடத்தைக்கண்டு
மங்கையர் மூன்னிறந்துவிட்டாள் மனனவன் தீ முழுகிவிட்டான்
இங்கி ந்தால் கருமமல்ல இறக்கயினிவேணுமென்ன
மெய்குழலும் மன்னவனும முங்கினதோர்வேள்விகிட்ட
பையவந்து வாள்நிறுத்திப் பாய்ந்தானே சிறுக்கனவன்
உடவாளின் மேற்சாடி உயிரிழந்தான் குஞ்சிராமன்
இடமுடனே மூபேரும் திருவுருவமாகிவர
விண்ணோர்கள் தான்மகிழ வேறேசொரூபமாக
...ன்மணிபோலவடிவு காரணமதாய் வளர்ந்து
தமராகவந்தவரில் நாடாளன் மன்னவனும்
குமரப்பராசா தனக்கு குமாரப்பெருமாளெனவும்
தோட்டுக்காரியம்மனுக்குத் தோடழகியம்மையென்றும்
கூடவெடிக்காரரென குஞ்சிராமச்சிறுக்கனுக்கும்

வல்லவரம் மூபேர்க்கும் வலியபிணி தீர்க்கவரம்
நல்லதவஞ் செய்தவரை நாளும் வைத்து ஆளவரம்
ஆதரவாய்ச் சிவன் கொடுத்த அரியவரமதுவும்பெற்று
பூதலத்தில் மாறியாடி பேருசொல்லிப பூசைகொள்ள
வேசம்மாறி வேசம் கொண்டு விளியெறிந்து மூபேரும்
ஆசையுடன் சிவனுரை அடிபணிந்து தொழுது சொல்வார்
காசினியில் பூசைபண்ண கால்நடையாய்ப் போவேனே
வாசமுடன் வாகனங்கள் வாக்கருளவேணுமென்ன
பச்சை வர்னப் புரவியது பாங்குடனே தானமைத்து
கெர்ச்சிதமாய் மன்னவர்க்கு கிருபையுடனே கொடுத்தார்
அந்தவுடன் பார்வதியாள் அரனிடத்திலேது சொல்வாள்
வந்துநின்ற பெண்கொடியாள் மங்கை நல்லாள் தோடழகி
கன்னியர்க்கு திருப்பாதங் கட்டுடனே நோகாதோ
பொன்மேனியுடையவட்கு பொற்றேரு கொடுவுமென்றார்
இச்சையுடனேயுரைக்க ஈஸ்வரரும மனமகிழ்ந்து
பச்சைத்தேர் தனையழைத்துப் பாவையர்க்குத்தான் கொடுத்தார்
கொடுத்தநல்ல தேர்மேலே கோதைநல்லாள் தோடழகி
வெடிக்காரன் குடைப்பிடிக்க வேந்தன் பரிமீதேறி
தொழுதரனுரை வணங்கி சிறந்தமுட்டப்பதியில்வந்து
முழுதும் குறை தீர்த்தநளும் மூத்த நயினர் கோவிலிலும்
பட்டணத்தாரோடையிலும பாவைதோடழகியம்மை
தட்டாரிறப்பதிலும் சாத்தாவின் கோவிலிலும்
மன்னவனுர் முன்னுண்டு மடிந்த படையுங்கூட்டி
மன்னன் குமரப்பெருமாள் மாயப்பேரு தான்கொடுத்தார்
ஊருசுற்று வீரனென்றும்உத்த கருங்கிடாய்க்காரன்
வீரன்முத்துக்கறுப்பனென்றும் வீரசூரப்பெருமாளென்றும்
பலசொருபக்காரனென்றும பலவேசமுத்தெலவும்
பலவிதமாய்ப் பேருசொல்லி படைகளுக்குப் பேர்கொடுத்தான்
பேர்கொடுத்துப் படைகூட்டி புகழ் தீர்த்தமாடுதற்கு
குமாரபபெருமாளவரும கோதைதோடழகியுமாய்
ஆகாசத்தேரதிலும் அழகுடைய குதிரையிலும்
வாசமுடன் போகவென்ன வாகனத்திலேறினரே

## துடுக்கு

மஞ்சள்மாவில் குமரப்பெருமாளும்
மங்கைதோடழகி தேரிலேவர
குஞ்சிராமன் குடையும் பிகழ்த்தவே
கூண்டதோர் படை முன்னணியாய்வர
தேசந்தென்குமரிப் பதிதனிலே
தீர்த்தமாடுந்துறைதனிற் செல்லுவார்
ஆசையாய்த் தண்டு வாங்கயம்சங்கிலி
அரிசித்துறை தவிட்டுத்துறையிலும்
தட்டில்லாமலே தீர்த்தமுமாடியே
சந்தோஷமாய் வருகிறபோதிலே
எட்டிப்பார்க்கவே கிட்டப் பரக்குடி

எல்லோரும் முன்னோடிப் போகவே கண்டும்
தெரிந்தும் தெரியாதவர் போலவே
தேசத்திலே யிருக்கிறபேர்களை
வசமாக்கியே நீங்களெல்லாஞ் சென்று
வாருமென்று விடைகொடுத்தேவினர்
சென்று எப்பிப்பரவர் தெருவிலும்
சிலுவையான குருசியடியிலும்
நன்றதாகவே கோவில் வாசலிலும்
நாட்டமாகவே கூட்டத்தலத்திலும்
வேதமோதிய பாதிரியாருக்கு
மெத்தக் கோட்டிப் பயித்தியமேவினர்
போதங் கெட்டுப் பயித்தியம் மீறியே
பெட்டகத்தை யடித்தங் குடைப்பானும்
திருக்கமாயிட்ட சட்டைகளானதை
திரிப்போலே கிளித்து எறிவானும்
குருக்களென்னவே கும்பிட்டபேர்களை
கொடுங்கை தாழ்த்துச் செவிட்டிலடிப்பானும்
குருக்கள் பட்டிடும் பாடதைப் பார்த்துமே
கூடநின்ற பரவர்கள் கூடியே
பரவர் கூடிப் பணம் நேர்ந்து வைக்கவே
பயித்தியமும் அகத்தியமும் நிற்குமாம்
ஊன்றி நேர்ச்சைகள் செய்த பரவர்கள்
உடனங்கு கால் நிமிடந்தவறுமல்
சான்றோர் கையிற் பணங்கள் கொடுத்திட
தாயமாட்டாமலூட்டுக் கொடுத்தாரே
ஊட்டுணவுடன் பூசைகொடுக்கவே
உதிரக்காரியாந் தோடழகியம்மை
நாட்டில் பூசை இனிவாங்க வென்னவே
நல்ல வீரன் குமாரப்பெருமாளும்
வன்னமானதோர் தெக்ஷிண பூமியில்
வளமையாகப் படையுடன் போகவே
கன்னி மாகுமரியுங் கடந்தவர்
கட்டுடன் குண்டல்த்தேரியும் விட்டனர்
தாட்டிமையாய் குமாரப் பெருமாளும்
தலைக்குளமுடன் பத்துங்கடந்தனர்
நாட்டில் மிக்க மணக்குடிதான் விட்டு
நாடியே குடிதேடி வந்தார்களே

## நடை

மடியாமல் பெரும் படைகள் வாய்த்தபொழி முகமும்விட்டு
அடைவான இளந்தோப்பும் ஆனகளிக்கரையுமிட்டு
சென்னல்விளை நிலமும் விட்டு சிறந்த பாற்குளமும்விட்டு
மன்னர் பெரும் படையோடே வாருரே குதிரையிலே
காராளர் தெங்கம்பூரில் கரையாளரிருப்பிடமும்
சராளிருப்பிடமும் சென்று ஐயன் கோவில்விட்டு

ஆதிபரன்றன் மருகன் அழகுமதி சூதனனுர்
நீதியுடனுராடும் நேருவழியாகவே தான்
செங்குளத்து விளையுவிட்டு சேர்பறக்கை யூரதிலே
மன்னவர்களந் தணர்கள் மற்றும் பரதருடனே
தள்ளவொண்ணுவெள்ளாளர் தானிருக்கும் இடமும் விட்டு
வள்ளல் வீரமுடையமன்னன் வனிதையர் தோடழகியுமாய்
வருகையிலே மதிசூதனன் வார்த்தை ஏது சொல்லுவாராம்
உருக்கமுடனெங்கிருந்து உடைய தம்பி வாறீரென
கைப்பிடுத்து மன்னவனை கருத்துடனே யிருத்திகொண்டு
இப்போது படையோடே என்னிடத்தில் வந்ததென்ன
மன்னவருந்தான் கேட்க மறுத்துரைபபான் ராசாவும்
என்னையுந்தான் வணங்குதற்கு ஏற்றகுடி தேடிவந்தேன்
என்ன உன்னை வணங்குதறகு எத்தகோவில் விளைதனிலே
மன்னவனுர் சொல்மறகான் வள்ளலெனுங் கொடைகரத்தான்
நீராழியுள்ள தலம் நித்தம் பயிரேற்றுந்தலம்
பேராழி உழவரெல்லாம் பெருவாழ்வாயிருக்குந்தலம்
சமுத்திரங்களடுத்ததலம் தன்மநெறியுள்ள தலம்
உபத்திரவமில்லாமல் ஊர்தழைத்து வாழுந்தலம்
சிவபூஜைதான் நடத்தும் தேவி சிறந்தோங்குந்தலம்
தவமாகப பலபேர்க்குந் தானதர்மஞ் செய்யுந்தலம்
பத்திரமாகாளிமக்கள் பவிசாக ஒருப்போலே
எத்திசையுங் கீர்த்திபெற்ற இணைவில்லிமாடனீன்ற
புத்திரனும் நாராயணன் பெரும்புகழன் கொடைகரத்தன்
சத்தியவாக்குடையவனும் தன்மநெறியுள்ளவனும்
தன்னிடத்தில் பூசையுண்டு தவறுமல் வாழ்ந்திருங்கோ
மன்னர் மதிசூதனனுர் வாக்குரைத்த சொற்படியே
மன்னவனுர் குதிரையிலே மங்கை நல்லாள் தோதிலே
மங்கையர்கள் குரவையிட மகிழ்ந்து பெரும்படையோடே
பெரும்பாதை வழியாகப் புறப்பட்டார் படையோடே
வருமபோது வில்லிமாடன் மகிபன் நாராயணனும்
கருமமுடனே யவரும் காசினி எங்கும் புகழ
இருக்குமந்த பதிதனிலே ஏத்தகோவில் விளையில் வந்தார்
வந்தவரும் பதியருகே வாய்த்ததென் மூலையிலே
சிந்தை எல்லாந்தான் மகிழ்ந்து சிவதலமீதாமெனவே
சந்தமுடன் கோவில்விளை தன்னிலிவர்களொருப்போல்
விந்தைபெறப் புகழ்நடத்தி வீற்றிருந்தாரன்னுளில்
வீற்றிருக்கும் நாளையிலே விமல பரன் றிருவருளால்
சீற்றமுடனவர் தனக்கு தெரிசனத்திற் சொல்லுவாராம்
வந்த நல்ல புதுமைகளும் வரலாறுந்தான் கேட்டு
சந்தமுடன் கோவில் வைத்து தானூட்டி உணவுசெய்ய
மாதாந்தக் கட்டளையும் வளமையுடனே சேவித்து
நாதாந்தமாகவுந்தான் நல்லதொரு ஊரவர்கள்
திருவுருவுந்தான் பிடித்து சித்திரமுந்தானெழுதி
பெருமையுடனேயவற்கு பெரும்படைப்புத்தான் படைத்து
கூட்டமிட்டுத்தான்தொழுது குரவையிட்டு விற்பூட்டி

ஆட்டுப்பாக்டு கொட்டுடனே அலங்காரமாய் வரவே
பூசையுண்டு வீற்றிருந்தார் புகழுங் குமாரப்பெருமாள்
ஆசையுடனடிதொழுதார் அரிய குடியானவர்கள்
வாளுங்குடியானவற்கு வள்ர் தீங் குவாராமல்
ஆள் வீரன் பலசொரூபக்காரன் பல சொருபியுமாய்
இக்குப்புகழப் பிறந்த தீரன் சுடலைமாடனுடன்
பக்குவமாய்ப் படையோடே பவிசுபெற வாழ்ந்திருந்தார்
நாடும் புகழிக்கதையை நளினமுடனே எழுதி
பாடும் புலவோருடனே பாட்டுக்கேட்ட பெரியோரும்
ஆலதுபோல தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
சிலமுடனன்ன சுற்றம் சிறப்பாக வாழியதே.

## வெண்பா

நல்லார் பிறர் குற்றம் நாடார் நலந்தெரிந்து
கல்லாதா ரென்பிழையைக் காண்பாரோ—அல்லாத
என்போல்வா ரென்னை யிகள்வரோ என்கவிக்குப்
பின்பாரோ சொல்வார் பிழை.

தோட்டுக்காரி அம்மன் கதை

முற்றிற்று.

கலைமகள் பிரஸ், வடக்கன்குளம்.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

குறைந்த விலை! அரிய நூல்!!

ஒவ்வொரு குடும்பத்திலும்
அவசியம் இருக்க வேண்டிய

அனுபவமுறை

# குடும்ப வைத்திய பொக்கிஷம்

இதில் சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும், அடிக்கடிவரும் சிலவியாதிகளுக்குத்தக்க நாட்டு மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. வைத்தியர் உதவியில்லாமலே செய்து குணம் பெறலாம். விலை குறைவாகவே வைக்கப்பட்டிருக்கிறது.

விலை அணா 4 தான்

5 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பிரதி
புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விபரங்களுக்கு:-

**கலைமகள் கம்பெனி**

174, ஹைரோடு, திருநெல்வேலி சந்திப்பு.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

# பெரிய எழுத்து புத்தகங்கள்

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| ஸ்ரீ மகாபாரதம் வசனம் 4 வால்யூம் படங்களுடன் | | 25 | 0 |
| ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன் | | 15 | 0 |
| ஸ்ரீமத் கந்தபுராண வசனம் 2-வால்யூம் படங்களுடன் | | 15 | 0 |
| ஆதிபர்வம் | படங்களுடன் | 5 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் | ,, | 5 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை | ,, | 4 | 0 |
| விராடபர்வம் | ,, | 3 | 8 |
| தருமர் அஸ்வமேதயாகம் | ,, | 2 | 8 |
| பஞ்சபாண்டவர் வனவாசம் | ,, | 1 | 8 |
| மதனகாமராஜன் கதை | ,, | 1 | 8 |
| அல்லியரசாணி மாலை | ,, | 1 | 4 |
| அபிமன்னன் சுந்தரி மாலை | ,, | 1 | 4 |
| வைகுந்த அம்மானை | ,, | 1 | 8 |
| காத்தவராயசுவாமி கதை | ,, | 1 | 8 |
| கிருஷ்ணன் தூது | ,, | 1 | 0 |
| நளச்சக்கிரவர்த்தி கதை | ,, | 1 | 0 |
| ஆண்டையார் அம்மானை | ,, | 1 | 0 |
| ஞானசவுந்தரி அம்மானை | ,, | 1 | 0 |
| பவளக்கொடி மாலை | , | 0 | 12 |
| ஆரவல்லி சூரவல்லி கதை | ,, | 0 | 12 |
| புலந்திரன களவு மாலை | ,, | 0 | 12 |
| மரியாதை ராமன் கதை | ,, | 0 | 12 |
| கோவலன் கதை | ,, | 0 | 12 |
| சித்திராபுத்திரன் கதை | ,, | 0 | 12 |
| கருடபுராண வசனம் | ,, | 0 | 12 |
| மயில் ராவணன் கதை | ,, | 0 | 12 |
| புரூரவச்சக்கிரவர்த்தி கதை | ,, | 0 | 12 |
| கர்னமகாராஜன் சண்டை | ,, | 0 | 12 |
| தேசிங்குராஜன கதை | ,, | 0 | 12 |
| மதுரைவீரன கதை | ,, | 0 | 12 |
| மநுநீதி காதல் | ,, | 0 | 10 |
| பொன்னுருவி மசக்கை | ,, | 0 | 10 |
| துரோபதை குறம் | ,, | 0 | 8 |
| வாலி மோட்சம் | ,, | 0 | 8 |
| ஏணியேற்றம் | ,, | 0 | 8 |
| சிறுத்தொண்டபக்தன் கதை | ,, | 0 | 8 |
| நல்லதங்காள் கதை | ,, | 0 | 6 |

கிடைக்குமிடம்:—

**கலைமகள் கம்பெனி**

174, ஹைரோடு திருநெல்வேலி சந்திப்பு